விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 17 வியாழக்கிழமை (30.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அமெரிக்க தீர்மானம் குறித்து இந்தியாவுடன் இலங்கை பேச்சு



## குர்ஷித்தை சந்தித்தார் பீரிஸ்

(புதுடில்லி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள போர்க்குற்ற தீர்மானத்தை இலங்கை முறியடிக்க முயற்சி மேற்கொண்டுள்ள நிலையில், இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை, இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்துப் பேசியுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க..

# நேற்றும் இரண்டு



(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் ம்னித புதை குழி மீண்டும் 17-வது தடவையாக நேற்று புதன் கிழமை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப பட்டபோது. இரண்டு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 8.30 மணி முதல் மதியம் ஒரு மணிவரை குறித்த புதைகுழி தோண்டப்பட்ட போதே மேலும் இரண்டு எலும்

20 ஆம் பக்கம் பார்க்க..

# பிரபாகரனை நினைவு கூரவே முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி

## தேசப்பற்றுள்ள இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபாகரனை நினைவு கூருவதற்காகவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் நினைவுத் தூபி நிறுவப் போகின்றார் எனக் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம்சாட்டியுள்ளது.

அத்துடன் தனித்தமிழீழத்துக்கான அரசியல் நகர்வுகளை வட மாகாண சபை மெதுமெதுவாக நகர்த்தி வருகிறது. இது பயங்கரமானது என்றும் அவ்வியக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச விசாரணை வேண்டுமென்றும் யுத்தத்தில் உயிரிழநத

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஜெனீவா செல்லும் தீர்மானமில்லை

(நியூயோர்க்)

ஜெனீவாவிற்கு விஜயம் செய்வது குறத்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வுகளில் காணாமல் போதல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய அனந்தி சசிதரன் ஜெனிவாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஜெனிவாவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை அனுப்பிவைக்க

20 ஆம் பக்கம் பார்க்க..

இனத்தின் மீது மொழியை திணிக்க முடியாது
செய்திகள் பக்கம் 04


பந்துவீச்சு திருப்தியில்லை
விளையாட்டு பக்கம் 18

மதங்களிடையே பிணக்கை ஏற்படுத்த முயற்சி
செய்திகள் பக்கம் 13


நாளை வானில் சுப்பர் நிலவு
செய்திகள் பக்கம் 16


பொதுவேட்பாளர் எண்ணம் தற்போதைக்கு இல்லை
செய்திகள் பக்கம் 11

அன்றைய புதையலும் இன்றைய புதையலும்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

# புலிகளின் செயற்பாட்டாளரை நாடுகடத்த பிரான்ஸ் நடவடிக்கை

(பாரிஸ்)

பிரான்ஸில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டாளர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜெயந்தன் தர்மலிங்கம் என்பரை இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவினை அந்நாட்டு நீதிமன்றத்திடம் கோரியுள்ள நிலையில், குறித்த சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பிரான்ஸ் செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டாளர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சர்வதேச பொலிஸாரின் இன்டர்போலின் உதவியின் கீழ் பிரான்ஸிலுள்ள ஷெசி நகரில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள அதேவேளை,

20 ஆம் பக்கம் பார்க்க..

# கருத்துக் கூற ஜப்பான் மறுப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கெதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் பிரேரணை தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தற்போது கூற முடியாது என்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதோ ஹொபொ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பில் தற்போது

20 ஆம் பக்கம் பார்க்க..

# புலிகள் - தமிழ்க் கூட்டமைப்பு தொடர்பு குறித்து விசாரணை?

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான தொடர்பு குறிதது விசாரணை நடத்தப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2001-ம் ஆண்டு முதல் இரு தரப்புக்கும் இடையிலான உறவு தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக புலிகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டு செயற்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

விசாரணை மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யுத்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புலி ஆதரவு செயற்பாடுகள் குறித்து சர்வதேச சமூகத்திற்கும் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பாராளுமன்ற மற்றும் மாகாண

20 ஆம் பக்கம் பார்க்க..

## வலி வடக்கு மீள்குடியமர்வு

# அரச அதிபர் - கட்டளைத் தளபதி விரைவில் விசேட சந்திப்பு !

(யாழ்பாணம்)

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தமிழ்மக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவித்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

கடந்த 1990 ஆண்டு யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் தமது குடும்பங்களுடன் தற்பொழுதும் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள, உறவினர்கள் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இந் நிலையில் இந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்று மாறு பல தரப்

20 ஆம் பக்கம் பார்க்க..

# நம்பகமான விசாரணைக்கு ஆதரவளிக்கத் தயார் !

## பிரித்தானியா அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தக் குற்றச்செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மெய்யானதும், நம்பகமானதுமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்தால் அதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என பிரித்தானியா தெரிவித்துள்ளது. எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக நம்பகமான உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைச்சர் ஹியூகோ ஸ்வையார இதனைக

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உதவித்திட்டங்களை ஆராய இந்திய விசேட குழு வருகை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென இலங்கைக்கு வருகை தந்துள்ள விசேட குழுவினர் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தை சந்தித்து கலந்துரையாடினர். இச் சந்திப்பு யாழில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இலங்கை வந்த குழுவில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலாளர் சுஜாதா மேத்தா, வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளரும் நிதி அமைச்சின் ஆலோசகருமான பினய் குமார் மற்றும் அந்நாட்டு உயர் அதிகாரிகளான அனுராக் சிறி வஸ்ரவா, ஜோன் மாய், மன்மோகன் வர்மா, ஷா கீர்த்தி நட்வர்லால், ஜஸ்ரின் மோகன் உள்ளிட்ட ஏழுபேர் வருகை தந்து துணைத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இந்திய வீட்டுத்திட்டம், புகையிரதப் பாதை அமைத்தல், துறைமுகங்கள் புனரமைத்தல் உள்ளிட்ட இந்திய அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் விரிவாக இந்தீக் குழுவிற்கு துணைத் தூதுவர் மகாலிங்கத்தால் விளங்கப்படுத்தப்பட்டது. (எ-6)

# முருகன், சாந்தன், பேரறிவாளன் மனு மீதான விசாரணை இன்று

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் சார்பில் தண்டனையை குறைக்க வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வருவதாக இருந்த நிலையில், விசாரணை இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு கடந்த 2000 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களின் சார்பில் தாக்கல செய்யப்பட்ட கருணை மனுவை, கடந்த 2011 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் நிராகரித்தார். கருணை மனு நீண்ட காலம் நிலுவையில் வைக்கப்பட்டிருந்த காரணத்தால், அவர்களின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில், மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று விசாரணைக்கு வருவதாக இருந்த முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னர் மற்றொரு வழக்கின் விசாரணை நீண்ட நேரம் நடைபெற்றதால் மூவரின் மனுக்கள் மீதான விசாரணை இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதலில் முருகனின் வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி தனது வாதத்தை தொடங்குகிறார். (எ-11)

# சவுதியிலிருந்து இலங்கையர் நாடு கடத்தப்படுகின்றனர்

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் உட்பட சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட உள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில் புரியும் அனுமதிப் பத்திரம் இல்லாதவர்கள் மற்றும் அதனை புதுப்பிக்காத வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்பட உள்ளனர்.

இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், சூடான், எகிப்து மற்றும் யேமன் நாடுகளை சேர்ந்தவர்களே நாடு கடத்தப்பட உள்ளனர்.

சவுதி உள்துறை அமைச்சும் தொழில் அமைச்சும் இணைந்து அங்குள்ள பாரிய வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தேடுதல் நடத்தின.

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சவுதி அரசாங்கம் வழங்கிய பொது மன்னிப்பு காலத்தில் அந்நாட்டில் உரிய ஆவணங்கள் இன்றி தங்கியிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களின் சொந்த நாடுகளுக்கு திரும்பினர்.

சவுதி அரேபியாவில் தொழில் வாய்ப்பின்றி 12 வீதமானவர்கள் இருக்கும் நிலையில், அங்கு 55 வீதமான வெளிநாட்டவர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

28 மில்லியன் சவுதி அரேபிய மக்கள் தொகையில் 9.1 மில்லியன் பேர் வெளிநாட்டு தொழிலாளர்கள் என ஐக்கிய நாடுகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஜனாதிபதி மகிந்தவை பிரபாவுக்கு ஒப்பிடுவதா?

## மேதானந்த தேரர் சீற்றம்

(கொழும்பு)

30 வருடகால சாபத்தை முடிவுக்கு கொண்டு வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரபாகரனின் முடிக்கு ஒப்பானவர் அல்ல எனக் கூறுவது பாரிய குற்றம் என நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவள மேதானந்த தேரர் தெரிவித்தார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலில் உள்ள ஒரு முடிக்கும் ஒப்பிட முடியாதவர் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரன் என்பவர் மிகவும் ஆபத்தான பயங்கரவாத அமைப்பின் தலைவர். அப்படியான ஒருவரின் முடியுடன் கூட ஜனாதிபதியை ஒப்பிட முடியாது என பொன்சேகா கூறியுள்ளதன் மூலம் அவர் தற்பொழுது எந்த வழியில் பயணிக்க தொடங்கியுள்ளார் என்பது தெளிவாகியுள்ளது.

பிரபாகரன் மோட்டார் குண்டுகளை வீசி தாக்கி, வெடி குண்டுகளை வெடிக்க செய்து, தற்கொலை குண்டுதாரியை கொழும்புக்கு அனுப்பி பொன்சேகா மீது தாக்குதல் நடத்திய போது பொன்சேகாவுக்கு பிரபாகரனின் உடலில் உள்ள முடியின் மதிப்பு தெரியவில்லையா என நான் கேள்வி எழுப்புகிறேன்.

வாய் இருக்கின்றது என்பதால் வீணாக வார்த்தைகளை உதிராது ஒழுக்கமான அரசியலில் ஈடுபடுமாறு பொன்சேகாவிடம் கேட்டுக்கொள்வதாக மேதானந்த தேரர் குறிப்பிட்டார். (எ-11)

# சவுதியில் விபத்து இலங்கையர் பலி

(றியாத்)

சவுதி அரேபியாவின் ஜுபேல் என்ற பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த இவர் உட்பட 8 பேர் பணி முடிந்து தங்குமிடத்தை நோக்கி வாகனத்தில் சென்ற பொழுதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இலங்கைப் பிரஜை உட்பட 4 பேர் பலியாகினர். பொலநறுவை வெலிகந்த பிரதேசத்தை சேர்ந்த 48 வயதான ஆர். டப்ளியூ.எஸ்.ரத்நாயக்க என்ற இலங்கை பிரஜையே சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

அத்துடன் பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளத்தை சேர்ந்த மூவர் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். (எ-11)

# தேர்தல் செலவு 120 கோடி ரூபா

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலுக்கு 120 கோடி ரூபா செலவாகும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மேற்படி இரண்டு மாகாணங்களிலும் 58 லட்சத்து 98 ஆயிரத்து 427 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இரண்டு மாகாணங்களிலும் மொத்தமாக 155 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

மேல் மாகாணத்தில் சுமார் 4 லட்சம் தமிழர்கள் வாக்காளர்களாக இருப்பதுடன் சுமார் மூன்று லட்சம் முஸ்லிம் வாக்காளர்களும் உள்ளனர்.

அதேவேளை தென் மாகாணத்தில் சுமார 50 ஆயிரம் தமிழர்கள் வசித்து வருகின்றனர். அத்துடன் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்களும் அங்கு வசித்து வருகின்றனர் என்றார். (எ-11)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் ரி.சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் எஸ்.கந்தசாமி மற்று[illegible] கலந்து கொள்ளவுள்ளனர். (எ)


## தவறிவிட்டது

இ.வசந்தராஜ் என்பவருடைய 741701120V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், ஏரிஎம் காட் மற்றும் இன்சுரன்ஸ், மெடிக்கல் ஐசி மற்றும் முக்கிய ஆவணங்கள் இணுவிலுக்கும் தொண்டைமானாறுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0766990973 இலக்கத்திற்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-6377)

உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?

மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்

021 222 8117

கைகொடுக்கும் நண்பர்கள் (இரகசியம் பேணப்படும்)

(கு-6359)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6374)

## இந்துசமயப் பேரவை

யாழ்ப்பாணம்

**பொதுக்கூட்டம்**

இடம் : இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்
காலம் : 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி
தலைவர் : பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்

நிகழ்ச்சி நிரல்

- தலைமையுரை
- செயலாளர் ஆண்டறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- புதிய உத்தியோகத்தர் தெரிவு
- தீர்மானங்கள் நிறைவேற்றல்
- நன்றியுரை

தயவுசெய்து இக்கூட்டத்தில் தவறாது பங்கு கொள்ளவும்
நன்றி

முக்கிய குறிப்பு: தீர்மானங்களை எழுத்து மூலம் முன் கூட்டியே சமர்ப்பித்து உதவவும்.

சி.க.சிற்றம்பலம்
தலைவர்.
15.01.2014

சி.சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்
தொ.பே: 021 222 6048

(5471)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞான முத்திரை

என்னுடைய நண்பர் ஒருவருக்கு சிற்பக் கலையிலே மிகவும் ஈடுபாடு.

அவருடன்கூடி ஒரு சிற்பக் கண்காட்சியைப் பார்க்கப் போயிருந்தேன்.

"ஆகா... அந்த ஞானமுத்திரையைப் பார்த்தீர்களா?" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை...!

"என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்.

"அந்தக் கையைக் கவனியுங்கள்!" என்றார்.

கவனித்தேன்.

சிற்பத்தின் கை உயர்ந்திருந்தது.

கட்டைவிரல் சுட்டுவிரலுக்கு எதிராக மடிந்தது. அதாவது கட்டை விரலும் சுட்டுவிரலும் தொட்டுக்கொண்டு இருந்தது.

"அதுதான் ஞான முத்திரையா?" என்றேன்.

"ஆமாம்!" என்றார் நண்பர்.

அதைப் பற்றி நிறைய விபரம் கூறினார். ஞான முத்திரை என்பது இந்திய வேதாந்த கருத்துக்களிலே மிகவும் உயர்வான ஒரு கருத்து.

பகவத் கீதையிலே ஒரு தியான சுலோகம்... அது ஸ்ரீகிருஷ்ணர் தமது வலது கரத்தில் ஞான முத்திரை காட்டுவதாக விபரிக்கிறது.

பொதுவாக நமது உடம்பின் வெளித்தோற்றம்... நம் மனசு எப்படி என்பதை சொல்லிவிடும்!

ஒருவர் படுத்திருக்கின்ற விதமே அவர் மனதின் நிலையை வெளிப்படுத்தி விடுமாம்!

ஒருவர் எப்படி உட்காருகின்றார் என்பதை பார்த்தே அவர் ஆழ்மனதின் அப்போதைய எண்ணத்தைப் புரிந்து கொள்ளலாமாம்.

உட்கார்ந்திருக்கின்ற ஒருவர் காலை ஆட்டிக்கொண்டே இருந்தால் அவர் மனது சஞ்சலத்தில் இருக்கின்றார் என்பதே பொருளாம்!

இதுமாதிரித்தான் ஞானமுத்திரையும் ஒரு சீரிய கருத்தின் வெளிப்பாடு என்கின்றார்கள் பெரியவர்கள்.

ஞானத்தைக் குறிக்கின்ற முத்திரை இது.

சாதாரண உலகியல் அறிவு மட்டும் இல்லை... மிக உயர்ந்த ஆன்மீக அறிவையும் அது குறிக்கின்றதாம்.

ஞான முத்திரை என்பது மனிதனின் தனித்தன்மை. அறிவைத் தேடுவது. மனிதத் தன்மையின் சிறப்பியல்பு. மிருகங்களாலே அறிவைத் தேட முடியாது.

அதெல்லாம் மரபு அணுக்களின் கட்டுப்பாட்டிலே இருக்கக் கூடியது. இயல்பு உணர்ச்சியால் (Instinct) உந்தப்பட்டு அதெல்லாம் செயற்படுகின்றது.

நம் முன்னோர்கள்– ரிசிகள்– இந்த ஞான முத்திரையை கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இதிலே இரு ஆச்சரியம் என்ன தெரியுமா? மனிதக் குரங்கு உட்பட எந்த ஒரு மிருகமும் ... மனிதர்கள் மாதிரி பெரு விரலையும் சுட்டு விலையும் நேர் எதிராக வைத்து சேர்க்க முடியாதாம்! மனிதனாலே மட்டுமே அதை செய்ய முடியுமாம்! எல்லா மிருகங்களுக்கும் கட்டை விரல் மற்ற விரல்களோடு முக்கியமாக சுட்டு விரலோடு ஒத்துழைப்பது இல்லை.

ஆனால் பரிணாம வளர்ச்சி அடைந்த மனிதன் முதல் முறையாக பெரு விரலையும் சுட்டு விரலையும் எதிர் எதிராக வைத்து இயங்குவது எப்படி என்பதை கற்றுக் கொண்டான். அதுதான் மனித குலம். தனது தொழில்நுட்பத் திறத்தால் கருவிகளைப் பயன்படுத்தி உலகை ஆட்டிப் படைக்கவும் அறிவைத் தேடவும் வழி வகுத்தது! மனிதனின் முதல் உடலியல் சாதனை இது.

இதன் மூலமாக அறிவுலகத்திலே புகுந்தான். மனிதனின் அறிவுலகத் தேடலின் முழுமையான சின்னம் இது. அறிவியல் என்ன சொல்கின்றது தெரியுமா?

ஏனைய விரல்களை இயக்கத் தேவைப்படுவதைவிட இந்த இரண்டு விரலை இயக்க அதிகமான மூளை அணுக்கள் தேவைப்படுகிறதாம்.

பெரு விரல் துண்டிக்கப்பட்டால் ஏனைய விரல்களின் செயற்றிறன் இயல்பாகவே பாதிக்கப்படும்.

மகாபாரதத்திலே தன்னுடைய அன்புக்குரிய சீடன் அருச்சுனனுக்கு போட்டியாக ஏகலைவன் வந்துவிடக் கூடாது என்பதற்காக துரோணர் கேட்ட குரு தட்சணை என்ன? கட்டைவிரல் தானே?

ஏகலைவனும் மகிழ்ச்சியோடு அதைச் செய்தான். இந்திய சிற்பக் கலையிலே காணப்படுகின்ற மகான்கள், அறிவாளிகள், அவதாரப் புருசர்கள், தேவ, தேவிகள் இவர்கள் சிலைகளில் எல்லாம் இந்த ஞான முத்திரையைப் பார்க்கலாம்! கோயில்களிலே ஸ்ரீ தட்சணா மூர்த்தியிடம் இதைப் பார்க்கலாம். இந்த ஞான முத்திரையால் அவர் தம்மை சூழவுள்ள சீடர்களின் சந்தேகங்களைப் போக்குகின்றார்.

இவ்வளவு விபரமும் என்னுடைய நண்பர் மூலமாக நான் தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் சாயந்தரம் இந்த நண்பர் வீட்டுக்குப் போயிருந்தேன். வழக்கமாக இரு கை கூப்பி என்னை வரவேற்பவர் அன்று ஞான முத்திரை காட்டி வரவேற்றார்.

"இதற்கு என்ன அர்த்தம்?" என்றேன்.

"எங்கள் வீட்டிலே தயாரித்த கோதுமை அல்வாவை இந்த இரண்டு விரலாலே தொட்டு எடுத்தேன். ஒட்டிக் கொண்டது. விரலைப் பிரிக்க முடியவில்லை... அதுதான் முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன். நீங்கள் வந்து உட்காருங்கள்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புலிகளுக்கு பணம் கொடுத்தே ஜனாதிபதி மஹிந்த தேர்தலை வென்றார் - பொன்சேகா

விடுதலைப் புலிகளுக்கு 500 மில்லியன் ரூபாய் பணத்தை கொடுத்தே கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாளன் இறந்த பின்னர் துட்டகைமுனு மன்னன், எல்லாளனுக்கு நினைவிடம் ஒன்றை அமைத்து கௌரவப்படுத்தினான்.

இந்த முன்னுதாரணத்தை அடிப்படையாக கொண்டு நானும் எதிரியை மதிக்கின்றேன். எனக்கு எதிரியுடன் எந்த பகையும் இல்லை. எனினும் நாட்டின் இன்றைய ஆட்சியாளர் அவ்வாறான நற்குணங்களை அறிந்தவர் அல்ல. நான் பிரபாகரன் பற்றி பேசும் போது ஆட்சியாளரின் மனம் கஷ்டப்படுகிறது.

ஆனால் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ஆட்சியாளர்களுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் விடுதலைப் புலிகளுக்கு 500 மில்லியன் ரூபாவை கொடுத்தனர்.

நாங்கள் இராணுவத்தில் இருந்த போது 12 ஆயிரம் எதிரிகளை கைது செய்து அவர்களை சிறந்த முறையில் நடத்தினோம். எவருக்கும் நாங்கள் எந்த சேதத்தையும் ஏற்படுத்தவில்லை.

அப்படி செய்த எங்கள் மீது அரச ஊடகங்களை பயன்படுத்தி தொடர்ந்தும் சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஜனநாயகக் கட்சியை பதிவு செய்த காலத்தில் அந்த பெயரைக்கூட அறிந்திராத இந்த ஊடகங்கள் எம்மீது சேறுபூச ஆரம்பித்துள்ளன.

அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே சவால் ஜனநாயகக் கட்சி என்பதால் எங்கள் மீது சேறுபூசும் பிரசாரங்களை முனனெடுத்துள்ளனர். இன்றைய ஆட்சியாளர்கள் செல்லும் பயணம சரியானதா என்பதை இம்முறை தேர்தலில் அறிந்து கொள்ள முடியும். சர்வதேச சமூகத்துடன் மோதல்களை ஏற்படுத்தி நாட்டை ஆபத்தில் தள்ளியுள்ளனர். (அ-2)

# தலைமை பொறுப்பிலிருந்து சமரசிங்கவும் பீரிசும் அவுட்?

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பில் இருந்து வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் மனித உரிமை தொடர்பான விடயங்களை கையாண்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் தற்பொழுது வெளிநாடுகளுக்கு சென்று ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளும் தூதுவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாகவே ஜெனீவா செல்லும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பில் இருந்து அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் நீக்கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த நெருக்கடியானது எதிர்காலத்தில் அதிகரித்து அரசாங்கத்திற்குள் பாரதூரமான பிளவுகளை ஏற்படுத்தும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 80 |
| தக்காளி | 40 | 40 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 30 |
| கோவா | 40 | 40 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 60 | 40 |
| பயற்றங்காய் | 120 | 110 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 70 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 50 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40. | 50 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 20 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 70 | 80 | 100 |

# இராசி பலன்

30.01.2014
(தை 17, வியாழக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
சதுர்த்தசி காலை 6.40 மணிவரை
அமாவாசை பின்னிரவு 4.20 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 4.48 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
அபிராமிப்பட்டர் குருபூசை,
அமாவாசை விரதம்

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**இடபம்** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு மனதில் உற்சாகம் குறையும், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் தரும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீட்டுக்கு வரலாம்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான நாள், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், இனிமையான நாள்.

**கன்னி** மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சொல்லை செயலாக்கிக் காட்ட முற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கல்வியில் மேன்மையுண்டு, ரோக பயமுண்டு.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், வருமானம் திருத்தி தரும், இனிய அனுபவங்கள் கிடைக்கும் நாள், அந்நியர் சந்திப்புண்டு, தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள்.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, எதிர்பாராத சில விவாதங்கள் ஏற்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகலாம், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றும், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** சொந்தபந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்ய முன்வருவீர்கள், சிறிய வேலை ஒன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள் ச.ச.நிலையம் கவனிப்பாரற்ற நிலையில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட புலோலி கிழக்கு கூழாவடி திருவருள் சனசமூக நிலையம் கவனிப்பாரற்ற நிலையில் மூடப்பட்டுள்ளது.

நீண்ட பல மாதங்களாக இச் சனசமூக நிலையம் இயங்க முடியாமல் அரைகுறையாக செயற்பட்டு வந்த போதிலும் தற்போது மூடப்பட்டுள்ளது. இச் சனசமூக நிலைய கட்டம் முற்றாக இடிந்து தூர்ந்து போன நிலையில் உள்ளது.


இது தொடர்பாக குறித்த சனசமூக நிலைய நிர்வாகமும் மக்களும் இணைந்து இதனை முன்னேற்ற பாதையில் கொண்டு வருவதற்கு உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட போதிலும் சிறந்த பலனைப் பெறமுடியாமல் போயுள்ளது.

இதேவேளை அப் பிரதேசத்திற்குட்பட்ட ஒருவரின் நிதியுதவியுடன் ஒரு பத்திரிகை குறித்த சனசமூக நிலையத்துக்கு வழங்கப்பட்டு வந்தது.


எனினும் அவரும் அப் பத்திரிகையை நிறுத்தி விட்டார். இதனால் அங்குள்ள இளைஞர்கள், வயோதிபர்கள் பத்திரிகைகள் பார்ப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

எனவே இச் சனசமூக நிலையத்தினை மீண்டும் சீரான முறையில் செயற்பட வைக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-10)

நன்றி:- மிரர்




# ஒரு இனத்தின் மீது மொழியை திணிக்க முடியாது-யாழ். அரச அதிபர்





(யாழ்ப்பாணம்)

ஒரு இனத்தின் மீது மொழியைத் திணிக்க முடியாது எனவும் யுத்தத்தின் வடுக்கள் விலகிச் செல்வதாகவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட வடமாகாணத்தில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டித் தொடரில் வெற்றி பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடகாலமாக யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்டு வந்த வடக்கு மாகாணத்திலிருந்து யுத்த வடுக்கள் விலகிச் செல்ல ஆரம்பித்துவிட்டன.

மொழியுரிமை மறுக்கப்பட்டு பல எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வந்த நிலையில் தற்போது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு மும்மொழிக் கொள்கையும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மொழியென்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடையாளமாகவுள்ளது. அதே வேளை இனத்தின் மீது மொழியை ஒரு போதும் திணித்து விட முடியாது.

மேலும் அரச கரும மொழிகள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் மொழி அமுலாக்கலில் குறிப்பாக தமிழ்மொழி அமுலாக்கலில் தீவிரமாக ஈடுட்டு வருகின்றது.

மிகவும் கவனத்துடன் இந்த ஆணைக்குழு செயற்படுவதோடு தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் அதற்குத் தேவையான ஆலோசனைகளையும் அனுசரணைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது.

பிளவுபட்ட இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்பட மனமாற்றம் மிகவும் அவசியம். அத்தோடு நேர்மனப்பாங்கு ஏற்பட வேண்டும். அப்போது தான் நல்லிணக்கத்தை எட்ட முடியும்.

கடந்த காலங்களில் மொழி, மதம் என்பவற்றின் ஊடாக வேற்றுமைத் தன்மை அதிகரித்துக் காணப்பட்டதோடு பாடசாலைகள் கூட அவ்வாறு வேற்றுமைத்தன்மையுடன் இயங்கி வந்தன. பாடசாலை அனுமதியின் போது பல வேற்றுமைகள் பார்க்கப்பட்டன.

மொழி மதம் ரீதியாக பிரிக்கப்பட்டிருந்தது. இதனால் வேற்றுமையும் அதிகரித்துச் சென்றது. இந்த நாட்டில் வேற்றுமை அதிகரிக்க காரணங்களாக அவை காணப்பட்டன எனவும் கூறமுடியும்.

ஆனால் தற்போது அந்த நிலை முற்று முழுதாக மாற்றப்பட்டு ஒவ்வொரு பாடசாலைகளிலும் தமிழும் சிங்களமும் கற்பிக்கப்படுவதோடு மும்மொழிக் கொள்கையும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மொழி என்பது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமையாகும். அந்த அடிப்படை உரிமையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

அந்த நோக்குடன் பல வேலைத் திட்டங்களை அரச கரும மொழிகள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது.

தேச பக்தியோடு ஒரே சமூகமாக உரிமையுடனும் உணர்வுடனும் சமூக ஒருமைப்பாட்டுடனும் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டிற்கமைய இந்த நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது.

அத்தோடு அரசாங்க திணைக்களங்களில் இருமொழி கரும பீடங்களையும் அமைத்து மொழிக் கொள்கையை அமுல்படுத்தி வருகின்றது.

இதனைவிட தமிழ் அதிகாரிகளை தென்னிலங்கையுள்ள சிங்களப் பகுதிகளுக்கும் வடக்கில் சிங்கள அதிகாரிகளை நியமித்தும் மக்கள் சேவையினை அரசு பூர்த்தி செய்து வருகிறது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்ட மகிந்த சிந்தனை ஊடாகவும் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எனவே வெறும் வாய்ப் பேச்சுக்கள் ஊடாக சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி விட முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொண்டு மனமாற்றத்தை ஏற்படுத்தி சமூக ஒருமைப்பாட்டுக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் பல்லின மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

எனவே இங்கு வேற்றுமைகள் பார்க்கப்படுவதில்லை. இதனை அனைவரும் புரிந்து கொண்டு சமாதானத்துடன் வாழ பழகிக் கொள்ள வேண்டுமெனவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)




# முன்னறிவித்தலின்றி தடைப்படும் மின்சாரம்

(பருத்தித்துறை)

வடமராட்சி பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கவேண்டுமென அப்பகுதிமக்கள்கோரிக் கை விடுக்கின்றனர்.

முன்னறிவித்தல்கள் எதுவும் இல்லாமல் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதால் மின்சாரத்தினூடாக செயற்படுகின்ற அனைத்து செயற்பாடுகளும் செயலிழந்து போவதாகவும் இதனால் மின்பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

காலை, மாலை, இரவு என்றில்லாமல் மின்சாரம் தடைப்படுவதால் பாவனையாளர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் வடமராட்சிக்கு தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-10)

# வருடாந்த இளைஞர் மாநாடு

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் 2ஆவது வருடாந்த இளைஞர் மாநாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்

சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளீதரனும், கௌரவ விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரனும் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வின் ஆசியுரைகளை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயகுமாரக் குருக்களும், மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தல பங்குத்தந்தை வண.சே.வி.ஜேம்ஸ் அடிகளாரும் வழங்குவார்கள். இதில் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

அத்துடன் முதன் முதலாக வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம வெளியிடும் "இளைஞன்" என்னும் மலரும் வெளியிடப்படவுள்ளது.

.நூலின் ஆய்வுரையை யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ மற்றும் வணிக கற்கை பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி வழங்குவார்.

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ் மாவட்டத்திலும் அகில இலங்கை ரீதியிலும் முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது(அ-2-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் சங்க பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு முதியோர் சங்க சம்மேளனத்தின் தலைவர் எம்.எக்ஸ். சர்வானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள இத் தெரிவுக்கு அனைத்து முதியவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2-23)

# கீரிமலையில் மஹோற்சவம்

(மானிப்பாய்)

கீரிமலை நகுலேஸ்வரம் அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரசுவாமி கோவில் மஹோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலத்தில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு கொடித்தம்பப் பூசையும் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும்.

பெப்ரவரி 27 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. அதே தினம் இரவு மஹா சிவ ராத்திரி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (அ-2-23)

# 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட வேண்டும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு இன்னும் நிரந்தர வீடுகள் தேவைப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மூன்று கட்டங்களாக 8 ஆயிரத்து 700 வீடுகள் புதிதாக கட்டிக் கொடுக்கப்படவுள்ள அதேவேளை போரால் சேதமடைந்த ஆயிரம் வீடுகள் புனரமைத்தும் கொடுக்கப்படவுள்ளன.

இதனைவிட ஏனைய நாடுகளினாலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள கரையோரப் பகுதிகளில் சில தொண்டு நிறுவனங்களினாலும் வெளிநாட்டு நிறுவனங்களினாலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய வீட்டுத்திட்டத்தைப் பொறுத்தவரை 2 ஆயிரத்து 198 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் பல நூற்றுக் கணக்கான வீடுகள் அமைத்து ஏற்கனவே அதற்கென தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் இரண்டாம் கட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் 2 ஆயிரத்து 198 வீடுகளில் 70 வீதம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இன்னும் தேவைப்படுவதாகவும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் மீள் குடியேற்றப்படும் போது இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் பிரதிநிதிகளிடம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பலராலும் மக்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டு வருகின்ற போதிலும் யாழ். மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீட்டுத்தேவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)

# யுத்தத்தில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு கலந்துரையாடல்

போர் நடைபெற்ற காலத்தில் காணாமற்போன சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு வடக்கில் அண்மையில் கிடைத்த முறைப்பாடுகள் குறித்து கலந்துரையாடியதாக அதன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கில் காணாமற்போன வர்கள் சம்பந்தமாக கிடைத்த தக வல்கள் ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அண்மையில் நடத்திய ஆரம்ப விசாரணைகளில் கிடைத்த 162 சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ. குணதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனவர்கள் பற்றிய மேலதிக முறைப்பாடுகள் கிடைத்தால் அது குறித்தும் ஆணைக் குழு விசாரணைகளை நடத்தும்.

ஆணைக்குழு கடந்த வாரம் கிளிநொச்சியில் நான்கு நாட்கள் விசாரணைகளை நடத்தியது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலனின் மனைவி அனந்தி சசிதரன் ஆணைக்குழுவின் முன் ஆஜராகி தகவல்களை வழங்கியிருந்தார்.

நான்கு நாட்களில் 440 பொது மக்களிடம் இருந்து ஆணைக்குழு முறைப்பாடுகளை பெற்றுக் கொண் டுள்ளது.

கிளிநொச்சியில் மீண்டும் விசாரணைகளை நடத்த எதிர் பார்த்திருப்பதாக ஆணைக்குழு வின் செயலாளர் குணதாச குறிப்பிட்டார்.

அடுத்ததாக ஆணைக்குழு தமது விசாரணைகளை முல்லைத் தீவு மாவட்டத்தில் நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ-11)

# பால்மாவைவிட குறைந்த விலையில் ஹெரோயின்

## ரோஷி எம்.பி.தெரிவிப்பு

அழும் குழந்தைக்கு பால் மாவை பெற்றுக் கொள்வதற்கான வழிமு றைகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கத்திற்கு முடியாமல் போயு ள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஷி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பால்மா குறைந்த விலையில் கிடைக்காத போதிலும் ஹெரோயின் போதைப் பொருளை 60 ரூபா முதல் 70 ரூபாவுக்கு நாடு முழுவதும் இலகுவாக பெற முடியும்.

மோசடிமிக்க இன்றைய அரசாங்கம் ஹெரோயின் போதைப் பொருளை கொள்கலன்களில் இறக் குமதி செய்கின்றது. பெருமளவு எதனோல் மதுசாரம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இவற்றை தடுத்து நிறுத்தவோ, அவற்றை நாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டை சீரழிக்கும் நபர்களை தண்டிக்கவோ அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை.

இப்படியான மிகப் பெரிய மோச டிகளில் ஈடுபடும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே விரட்டியடிக்க முடியும். இதனால் நாட்டை நேசிக் கும் சகலரும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அரசாங்கம் செய்த இடையூறுகள் இன்னும் நினைவில் உள்ளது.

அவருக்கு உணவை எடுத்துச் செல்ல அனோமா பொன்சேகா விடம் வாகனம் இருக்கவில்லை. எனது வாகனத்திலேயே பொன்சே காவுக்கு அவர் உணவை கொண்டு சென்றார்.தாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருப் பதாக அனோமா அன்று என்னிடம் கூறி னார். எனினும் அவர் நன்றி மறந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோக மிழைத்துள்ளார் என்றார். (அ-2)




உங்களுக்குத் தேவையான காணிகள், வீடுகளை வாங்கவும் விற்கவும் முதன் முதலாக வட பகுதியில் உதயமாகியுள்ள ஒரே நிறுவனம்.

காணி// வீடு விற்பனைக்கு

கொக்குவிலில் 2 பரப்பு காணி சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் (பயன்தரு மரங்களுடன் ) விற்பனைக்கு உண்டு. (A/001)

சங்கானை பிரதான வீதியில் 5 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (A/002)

சகல தொடர்புகளுக்கும்

றியல் எஸ்ரேற் Real Estate

இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை

வெள்ளிக்கிழமை விடுமுறை.

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3 கி.பா: 75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (பிரான்ஸ் – Not PR)<br>தொ.இ: B/2768 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 25 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS / Dr. (Internship)<br>எதிர்பார்ப்பு: MBBS வைத்தியர் மட்டும்<br>தொ.இ: G/2790 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 18 ¾ சூரி செவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L / புடைவையகம், பஸ் உரிமையாளர்<br>தொ.இ: B/2770 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 21 உயரம்: 164 cm<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/2791 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 10 ½<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / எலக்ரசியன்<br>தொ.இ: B/2772 | பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 42.5 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L /ஆசிரியர்<br>தொ.இ: G/2794 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 27 ¼ செவ் 4 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBBS, MD / வைத்தியர்<br>தொ.இ: B/2773 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 19 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/2797 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண், பெண் வேறுபாடின்றி சமமான ஊதியம் வழங்கவேண்டும் - ஒபாமா

(வோஷிங்டன்)

**வேலைவாய்ப்பிலும் வேலைக்கான ஊதியத்திலும் ஆண்களுக்கு நிகரான சமவுரிமை பெண்களுக்கும் வழங்கப்படும். நமது நாட்டின் வேலைத்திறனில் பெண்களின் பங்களிப்பு சரி பாதியாகவுள்ளது. இருப்பினும் ஒரே வகையிலான வேலை செய்யும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.**



அமெரிக்க நாடாளுமன்றத்தில் வருடாந்த கூட்டத்தில் உரையாற்றிய பராக் ஒபாமா, அமெரிக்க பொருளாதார மேம்பாடு, வெளியுறவு கொள்கைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் தொடர்பாக நீண்ட விளக்கமளித்து உரையாற்றினார்.

அப்போது அவரது தலைமையிலான அமெரிக்க அரசின் சாதனைகளை பட்டியலிட்ட ஒபாமா, அரசின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கிப் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில்,

நமது அரசின் தொடர் அர்ப்பணிப்பால் உலகம் முழுவதும் தலைவிரித்து ஆடிவந்த தீவிரவாத செயல்களை பெருமளவுக்கு கட்டுப்படுத்தி வெற்றி கண்டுள்ளோம்.

நமது ராஜதந்திர அணுகுமுறையால் ஈரானின் அணு ஆயுத உற்பத்தியை முழுஅளவில் தடுத்து நிறுத்தி, உற்பத்தி செய்து, மறைத்து வைக்கப்பட்டிருந்த அணு ஆயுதங்களை அழிக்கும் முயற்சியையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளோம்.

அந்நிய நாடுகள் முதலீடு செய்ய ஏற்ற நாடுகளில் முதலிடம் வகித்த சீனாவை பின்னுக்குத் தள்ளி தற்போது அமெரிக்கா முதலிடத்தை பிடித்துள்ளது. வெளிநாட்டினரின் முதலீடுகளை பெறுவதிலும் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 2014 ஆம் ஆண்டில் நமது பொருளாதாரம் மேலும் வளர்ச்சி பெறும்.

அமெரிக்காவின் பற்றாக்குறை பாதியாக குறைக்கப்பட்டுள்ளது. வேலையில்லாத 1.6 மில்லியன் மக்களுக்கு காப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் நடைபெறும்போர் இந்த ஆண்டு முடிவுக்கு வரும். இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக திரும்பப் பெறப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் பயங்கரவாதத்தை ஒடுக்க அமெரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆயுதம் தாங்கிய வன்முறைக்கு எதிராக ஒவ்வொரு அமெரிக்க குடிமகனும் செயல்பட வேண்டும்.

வேலைவாய்ப்பிலும். வேலைக்கான ஊதியத்திலும் ஆண்களுக்கு நிகரான சம உரிமை பெண்களுக்கும் வழங்கப்படும். நமது நாட்டின் வேலைத்திறனில் பெண்களின் பங்களிப்பு சரிபாதியாக உள்ளது.

இருப்பினும். ஒரே வகையிலான வேலைக்கு ஆணுக்கு 100 சதவீத சம்பளமும். பெண்ணுக்கு 77 சதவீத சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது. இது தவறானது. சமமான வேலை செய்யும் பெண்ணுக்கு சமமான ஊதியமும் வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில் பெண்கள் வெற்றி பெற்றால் அமெரிக்கா வெற்றி பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்றார்.

இவ்வாறு ஒபாமா பேசி முடித்ததும் அரங்கில் அமர்ந்திருந்த ஆண்களும், பெண்களும் எழுந்து நின்று ஒபாமாவை பாராட்டும் வகையில் சில நிமிடங்கள் வரை கரவொலி எழுப்பி ஆதரவு தெரிவித்தனர். (2)

## மோர்சி வழக்கு ஒத்திவைப்பு

(கெய்ரோ)

சிறையிலிருந்து தப்பித்தது தொடர்பான வழக்கின் விசாரணைக்காக நேற்றுமுன்தினம் மோர்சி எகிப்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கடந்த 2011 ஆம் ஆண்டில இவருக்கு முன்னால் பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக் ஆட்சிக்காலத்தில் சிறையில் வைககப்பட்டிருந்த இவர், அப்போது நடைபெற்ற புரட்சியில் சிறையிலிருந்து வெளியில தப்பினார்.

அந்த சமயத்தில் 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளும தப்பினர். அது குறித்த விசாரணைக்காக அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது எகிப்து அரசு மோர்சியைத் தனிமைப் படுத்தி சப்தங்கள் வெளிவராத கண்ணாடிக் கூண்டிற்குள் நிற்க வைத்தது. இவருடன் விசாரணைக்கு வந்த மற்ற 20 பேரும் மற்றொரு கண்ணாடிக் கூண்டிற்குள் நிற்கவைக்கப்பட்டனர்.

மோர்சி பதிலளிக்கும் போது மட்டுமே அவரது கூண்டினுள் ஒரு மைக்ரோபோன் வைக்கப்பட்டு அவரது பதிலுக்குப்பின் உடனடியாக அணைக்கப்பட்டது.

இந்த வழக்குகளின் கோப்புகளை வழக்கறிஞர்கள் ஆய்வு செய்து சரிபார்ப்பதற்காக அவர்களுக்கு கால அவகா சம் அளிக்கும்வண்ணம் எதிர் வரும் பெப்ரவரி 22ஆம் திகதிக்கு இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (2)




## சிரியா மாற்று அரசில் அஸாதுக்கு இடமில்லை

அமெரிக்கா திட்டவட்டம்

(வோஷிங்டன்)

சிரியா பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமைக்கப்பட உள்ள மாற்று அரசில் ஜனாதிபதி பஷார் அல் அஸாத இடம்பெறும் வாய்ப்பில்லை என்று அமெரிக்கா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இது குறித்து வோஷிங்டனில் வெள்ளை மாளிகையின செய்தித் தொடர்பாளர் ஜெய் கார்னே கூறியதாவது,

புதிய மாற்று அரசு என்பது இருதரப்பினரின் ஒருமித்த கருத்துடன் அமைக்கப்பட வேண்டியது ஆகும். எனவே சிரியா அரசின் எதிர்கால நடவடிக்கைகளில் தற்போதைய ஜனாதிபதி பஷார் அல்-அஸாத இடம்பெற இயலாது.

சிரியாவின் மாற்று அரசில் ஜனாதிபதி இடம்பெறக் கூடாது என்பது அமெரிக்காவின் விருப்பம் இல்லை. சிரியா மக்களும் அந்நாட்டு எதிர்க்கட்சிகளும் ஜனாதிபதி அஸாத் இடம் பெறுவதை விரும்பவில்லை. (2)

## ஜப்பானிடமிருந்து இந்தியா இரா.விமானங்கள் கொள்வனவு

(ஜப்பான்)



இரண்டாம் உலகப்போருக்கு பின் முதன் முறையாக இந்தியா ஜப்பானிடமிருந்து 1.65 பில்லியன் டொலர் மதிப்புள்ள இராணுவ விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளிநாட்டு சந்தைகளில் பாதுகாப்பு வாகனங்களை விற்பதில்லை என்ற அந்நாட்டு பிரதமரின் தடை உத்தரவு முடிவுக்கு வந்துள்ளது.

தலா 110 மில்லியன் டொலர் விலை கொண்ட 15 விமானங்களை கொள்வனவு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இது இரு நாட்டு உறவில் மற்றுமொரு மைல் கல்லாக அமைந்துள்ளதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜப்பான் நாட்டின் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவில் விமானங்களை வடிவமைத்து கட்டமைக்க இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இவ்விமானம் அந்தமான் நிகோபர் தீவுகளில் நிலை நிறுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு துறை அதிகாரியான கவுதம் பம்பாவல்லே கூறுகையில,

பாதுகாப்பு தொடர்பாக இரு நாடுகளும் வலுவான ஒப்பந்தத்தில் கையெழுத்துள்ளதாகவும். ஜப்பான் தொழில்நுட்பம் நமக்கு தேவை. ஜப்பானிய முதலீடு நமது நாட்டிற்கு தேவை என்று அவர் கூறியுள்ளார்.(2)

# தேர்தல் ஆணையக அறிவுறுத்தலை மீறி தாய்லாந்து அரசு தேர்தலை நடத்த முடிவு



(பாங்கொக்)

தாய்லாந்து அரசுக்கெதிராக பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நடக்க இருக்கும் தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியதை அரசு ஏற்றுக் கொள்ளாததால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி தேர்தல் நடக்கும் என்று அந்நாட்டு ஜனாதிபதி இங்லக் அறிவித்தார். தேர்தல் ஆணையத்தின் அனுமதியின்றி தேர்தல் திகதியை அறிவித்துள்ளதை எதிர்த்து பாங்கொக் நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

மேலும் அன்றைய தினம் நடக்க இருக்கும் தேர்தலில் வாக்களிக்க முடியாதவர்கள் முன் கூட்டியே தங்களது வாக்குகளை பதிவு செய்ய கடந்த 26ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அப்போது அரசுக்கு எதிரான கும்பலின் தலைவர் சுதின் தராதி மற்றும் அவரது ஆதரவாளர்களை நோக்கி அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுவிட்டுத் தப்பியோடி விட்டார். இதில், சுதின் தராதின் சம்பவ இடத்திலேயே இறந்தார். மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் தேர்தல் ஆணையத்திடம்பேச்சு வார்த்தை நடத்த அரசு நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்தது.

இதில், அரசு தரப்பில் இங்லக் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களும், தேர்தல் ஆணையம் சார்பில் அனைத்து அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அப்போது, தேர்தல் திகதியை 120 நாட்கள் ஒத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அதை ஏற்க இங்லக் மறுத்துவிட்டார்.

அப்போது பேச்சுவார்த்தை நடைபெற்ற பகுதியில் அரசுக்கு எதிரான 100இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் அங்கு கூடி துப்பாக்கியால் சுட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இங்லக்கை பதவி வலகவேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர். இதில் 2 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து துணை பிரதமர் தெப்கஞ்ஜானா கூறுகையில்,

அரசு அறிவித்துள்ள தேர்தலை தற்போது நிறுத்தாவிட்டால், இந்த பிரச்னைக்கு தீர்வு கிடைக்காது என்றார். இவரைத் தொடர்ந்து தேர்தல் ஆணையர் சோம்சாய் சுதியாகோன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், அரசு அறிவித்த தேர்தலை 3 தொடக்கம் 4 மாதங்கள் ஒத்தி வைக்காவிட்டால் இந்த நிலை தொடர்ந்து நீடிக்கும்.

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களை அரசு பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுப்பு தெரிவித்து, எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி நடக்க இருக்கும் தேர்தலை நிறுத்தவும், இங்லக்கை பதவி விலகவும் கூறியுள்ளனர். இதனால் தாய்லாந்தில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலைத்து வருகிறது. (2)



டுனிசியாவின் புதிய அரசியலமைப்பு சட்டத்திற்கு அந்நாட்டு பாராளுமன்றில் ஒப்புதல் வழங்கப்பட்டது. சட்ட புத்தகத்துடன் சபாநாயகர் மற்றும் பிரதமருடன் கைகோர்த்துள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி முஸ்தபா பென் ஜாபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தே.இ.மன்றத்தால் விண்ணப்பம் கோரல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கரப்பந்து,கபடி, வலைப் பந்து ஆகியவற்றிற்கான தேசிய மட்டத்திலான மூன்று வருட பாட நெறிக்கும் நடனத்துறையில் ஆர்வமுடையவர்களுக்கு இரண்டு வருட டிப்ளோமா பாடநெறிக்கும் srilanka youthelz அணிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் ஏ-9 வீதியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலயத்துடனோ அல்லது 0777782259, 0212060017 என்ற இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத் தலைவர் தவசீலன் கேட்டுள்ளார். (அ)




# தமிழ் மக்களை வந்தடையவேண்டிய தேவைகள் சிங்கள மக்களை சென்றடைகின்றன

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்

(குருமன்காடு)

தமிழ் மக்களுக்கு சென்றடைய வேண்டிய வீட்டுத்திட்டங்கள், சிங்களக் குடியேற்றங்களுக்காக பயன்படுத்தப்படுவது தொடர்வதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் தென்னமரவடி சென்ற போது மேற்படி நிலையை அவர் உறுதிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னமரவடிக்கு அண்மையாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பகுதியில் அமைந்துள்ள சாளம்பைக்குளம் எனும் தமிழ்க் கிராமம் அலம்பவேவ எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு சுமார் 200இற்கும் மேற்பட்டோருக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதற்கு அருகாமையிலுள்ள இன்னொரு கிராமத்திலும் குடியேற்றம் நடைபெறுவதற்கு ஏதுவாக சிறிய சிறிய கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாட்களில் அங்கும் வீட்டுத் திட்டம் வழங்கப்படலாம்.

தென்னமரவடி மக்கள் தெரிவித்தையிட்டு இதை நேரில் உறுதிப்படுத்தினேன்.

ஆனால் 2011/12/30 ஆம் திகதி மீள் குடியேற்றம் செய்யப்பட்ட இப்பகுதி மக்கள் இன்னமும் தற்காலிக கொட்டில்களிலேயே வசித்து வருகின்றனர்.

மேற்குறித்த கொட்டில்களின் ஆயுள் காலம் 6 மாதங்களே என்கிற நிலையில், சுமார் 2 வருடங்கள் கழிந்த நிலையிலும் அதற்குள்ளே வசிக்கிற அவல நிலை தான் அங்கு நிலவுகிறது.

மீள் குடியேற்றம் செய்யப்பட்டவுடன் வழங்கப்படும் 25ஆயிரம் ரூபா பணமும் இன்னமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

அப்பிரதேசத்திற்கு பிரதேச செயலர் இன்னமும் வந்து பார்வையிடவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தார்கள்.

மேலும் ஆரம்பத்தில் வந்தவர்களென 85 குடும்பங்களுக்கு மட்டும் 6 மாத கால நிவாரணம் வழங்கப்பட்டபோதும் ஏனைய குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது சுமார் 150 குடும்பங்கள் வரை அங்குள்ளனர்.

மேலும் 100 குடும்பங்கள் அங்கு வருவதற்கு தயார் நிலையிலுள்ளபோதும் உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையில் தான் அவர்கள் இன்னமும் வரவில்லை.

மேலும் தகுந்த வீட்டுத் திட்டங்கள் இல்லாத நிலையில் அவர்கள் பாம்புகள், யானைகள் உள்ளிட்ட விலங்குகளால் இடர்களை எதிர்நோக்குகிறார்கள். அண்மையில் 13 வயது சிறுவன் வைத்திய வசதி இல்லாமையால் இறந்து விட்டார்.

இதனால் அக்குடும்பம் மீண்டும் முல்லைத்தீவு சென்று விட்டார்கள்.

நியாயமாக தமிழ் மக்களுக்கு வந்து சேர வேண்டிய சேவைகள் புறக்கணிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களுக்காக பயன்படுத்தப்படுவது வருத்தமளிக்கிறது.

இவ்விடயத்தை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக மக்களிடம் தெரிவித்தேன் என்றார். (அ-2-250)

## கட்டடத் திறப்பு விழாவில் தமிழில் தேசிய கீதம்

(ஜெயபுரம்)

கிளிநொச்சி ஜெயபுரம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ளது.

ஜெயபுரம் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வின் போதே தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ளது.


வட மாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில், ஐக்கிய நாடுகளின் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

இதனிடையே, வழமைபோல் தேசிய கொடி ஏற்றப்பட்ட அதே வேளை, ஐக்கிய நாடுகளின் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இலச்சினைகள் மாணவர்கள் கையில் காணப்பட்டது.

புதிய கட்டடம் திறக்கப்படுவதற்கு முன்னர் தேசிய கொடி ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதம் தமிழ் மொழியிலும் பாடப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய கீதத்தை தமிழ் மற்றும் சிங்கள மொழியில் இயற்றுவதற்கு அரசியலமைப்பு சீர் திருத்தத்தில் இடம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-23)



"கிளிநொச்சி" கல்முனை,மண்ணித்தலை, கௌதாரிமுனை, வெட்டுக்காடு ஆகிய எல்லை கிராமங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையிலான குழுவினர் அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது மக்களை சந்தித்து அக்கிராமத்தில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு கனேடிய வாழவைப்போம் அமைப்பின் உதவியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்ததைப் படத்தில் காணலாம்.

# த.பே.நிலைய கட்டட வேலைகளை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

## வவு.நகர வரியிறுப்பாளர் சங்கம் முதல்வரிடம் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா யாழ்.வீதியிலுள்ள அரச பண்ணைக்குரிய காணியில் அமையவிருக்கும் தனியார் பேருந்து நிலையத்திற்கான வேலைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கு மாறு வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வட மாகாண முதலமைச்சருக்கு அச்சங்கம் 9 விடயங்களை தெளிவுபடுத்தி அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த சில தினங்களாக தனியார் பேருந்து தரிப்பு நிலையத்திற்கென்று மேற்கூறப்பட்ட இடத்தில் அமைந்த காணியில் பல கட்டட வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதையிட்டு வரியிறுப்பாளர் சங்கமாகிய நாம் நகரசபை செயலாளரிடமும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடனும் தொடர்புகொண்ட போது இது தொடர்பாக தங்களுக்கு எதுவித அறிவித்தல்களும் தரப்பட வில்லை எனவும் இது கொழும்பி லிருந்து அதிகார மட்டத்தினால் செய்யப்படும் ஓர் காரியம் என்றும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வவுனியா மக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளார்கள்.

இதை ஆராயும் போது இதில் பல உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட்டன. இப்படியான சட்டரீதியற்ற விடயங்களை தங்களிற்கு அறி யத்தருவது எமது கடமையாகும்.

இப் பேருந்து தரிப்பு நிலையமானது அரச பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இருப்பதால் பொது மக்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக நேரிடும்.

குறிக்கப்பட்ட காணித் தொகுதியானது அதன் ஒருபக்க எல்லையாக காமினி மகாவித்தியாலய பாடசாலையை உள்ளடக்கியுள்ளதால் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக்கு பெரும் குந்தகமாக அமையலாம்.

குறிப்பிட்ட காணியை சுற்றியும் எதிர்த்திசையிலும் மக்கள் செறிவாக வர்ழ்கின்றார்கள்.

எனவே அமை யப்போகும் இப் பேருந்து தரிப்பிடம் அவர்களுக்கு சுற்றாடல் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

இக் கட்டடங்கள் யாவும் நகரசபையினதோ அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையினதோ அனுமதி பெறப்படாமல் நடைபெறுபவை என அறிய வந்துள்ளது.

இச்செயற்பாடானது வவுனியா நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டு அங்கீ கரிக்கப்பட்ட புதிய நகர் திட்டமிடல் செயற்பாட்டிற்கு முரணான செயற்பாடாக காணப்படுகின்றது. அத்துடன் வீண் பண விரயத்தையும் ஏற்படுத்தும்.

மேலும் நகர சபையின் ஆட்சிக் காலம் முடிவடைந்துள்ள இக்கால கட்டத்தில் இப்படியான பாரிய செயற்றிட்டங்களை வவுனியா நகர சபை எல்லைக்குள் செயற்படுத்துதல் வவுனியா மக்களின் சிறப்புரிமைகளை மீறுவதாகவே நாம் கருதுகின்றோம்.

நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் இருப்பதனால் கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்பகுதிக்குள் கல்வி கற்கவரும் மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள், பொது மக்கள், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் அத்துடன் இவர்களின் காலநேரங்களும் வீணடிக்கப்படும்.

கிராமப்புற விவசாயிகள் தங்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லுதல் மிகவும் சிரமமாக இருப்பதுடன், அவர்கள் இந்த இடத்திலிருந்து இன்னுமோர் வாகன ஒழுங்கு செய்ய வேண்டிய நிலை உருவாகும். தற்போது உள்ள அரச பேருந்து தரிப்பிடத் திற்கு பின்பாக உள்ள அரச ஊழியர் விடுதிகளை (உள்வட்ட வீதி)குறிப்பிட்ட இடத்திற்கு மாற்றி அமைத்து பின் உள்வட்ட வீதியில் உள்ள காணியில் தனியார் பேருந்து தரப்பு நிலையத்தை அமைப்பது சாலச்சிறந்தது என நாம் கருதுகின்றோம்.

இத்திட்டமே புதிய நகர் திட்டமிடல் குழுவால் உருவாக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமாகும்.

இத் தீர்மானங்கள் யாவும் வவுனியா வரியிறுப்பாளர் சங்கம், வவுனியா வர்த்தகர் சங்கம், வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா மாவட்ட பிரஜைகள் ஒன்று கூடி நிறை வேற்றப்பட்டவையாகும்.

எனவே தாங்கள் தயவு கூர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுத்து ஓர் நல்ல முடிவை தருவீர்கள் என வேண்டி நிற்கின்றோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-266-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

704

## நல்ல பகைவன்



...“குருவே! மந்த புத்திக்காரனைப் பார்த்துக் கேலி செய்வதற்கு சாமர்த்தியம் தேவை இல்லை. அவனை சராசரிக்கும் மேலான அறிவாளியாக மாற்றத்தான் அறிவும், சாமர்த்தியமும், திறமையும், முயற்சியும் தேவை! அவற்றைப் பிரயோகித்து அவனை என்னைப் போல் அறிவாளியாக மாற்றினேன்” என்றான்.

“ஆகா! உத்தமான பிள்ளை நீ! சுயநலமே உருவான இவ்வுலகில, நம்பி மீது விசேஷ அக்கறை எடுத்துக்கொண்டு அவனை மாற்றிவிட்டாய்! அவனுடைய மாற்றத்திற்குக் காரணம் நீதான் என்று அவன தந்தை அறிந்தால் அவர் இன்னும் உனக்கு அதிக உதவிகள் செய்வர்” என்றார். “வேண்டாம் குருவே!” என்ற சுகுமாரன் “அவர் எனக்கு ஏற்கெனவே செய்த உதவிகள் போதும், அதற்கு இது கைம்மாறாக இருக்கட்டும்” என்றான்.

சுகுமாரனின் கல்விக்கான செலவை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி, நம்பியின் தந்தையான சரண்யன் சுகுமாரனின் தந்தை வசிக்கும் கிராமத்திற்கு அடிக்கடி சென்று அவர் பட்ட கடனை எல்லாம் தானே தீர்த்து வைத்து, பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து அவரை மீட்டார். அப்போது அவருக்கு சுகுமாரனின் தந்தை ஏன் கடனாளியானார் என்ற விவரம் தெரியவந்தது. அவருடைய பங்காளிகள் பேராசையே உருவானவர்கள். புத்திசாலியான சுகுமாரன் தன் தந்தையைவிட்டு அகன்று குருகுலம் சென்றவுடன், அவரை பசப்பு வார்த்தைகளால் மயக்கி, அவரை ஏமாற்றிப் பணம் பறித்துக் கடனாளியாக்கிவிட்டனர்.

இந்த விஷயத்தை அவர் அவ்வப்போது சுகுமாரனிடமும் தெரிவித்து வந்தார். இதனால் தனது சொந்தக்காரர்களை நினைத்து மனம் கொதித்தான். கல்வியையே நிறுத்திவிட எண்ணியபோது, நம்பியின் தந்தை குறுக்கிட்டு கல்வியைத் தொடரச் செய்தார். ஐந்து ஆண்டுகளில் சுகுமாரன், நம்பி ஆகியோரின் குருகுலக் கல்வி நிறைவு பெற்றதும் குருவிடம் விடை பெற்றுக் கொள்ள சுகுமாரன் வந்தபோது அவர் “சுகுமாரா! சுபாவத்திலேயே நீ மிகவும் நல்ல பிள்ளை. நீ இன்று போல் என்றும் மிக்க நல்லவனாகவே இருப்பாய்!” என்றார்.

அதற்கு சுகுமாரன் “குருவே! என் தந்தையின் பங்காளிகள் என் தந்தையைப் படுகுழியில் தள்ளிவிட்டதை எண்ணியெண்ணி என் மனம் கொதிக்கிறது. அதனால், அவரகளைப் பழிக்குப் பழிவாங்கிய பின் நல்லவனாக மாற முயற்சிப்பேன்” என்றான். அதற்கு ஞானேந்திரன் “மகனே! பழக்குப் பழி, வஞ்சத்திற்கு வஞ்சம் என்று பிடிவாதமாக இருந்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. நான் சொல்வதைக் கேள்! அவர்களை மன்னித்துவிடு! அப்போதுதான் வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்க முடியும்” என்றார்.


அப்போது அங்கு சரண்யன் வந்தார். நடந்த விஷயங்களைக் கேட்டபிறகு அவர் சுகுமாரனிடம், “தம்பி! உன்னை என் மகனாகவே இதுவரை நினைத்திருக்கிறேன். இனியும் அப்படியே! நீ செய்ய விரும்பும் செயல்கள் எதுவானாலும் அதற்குத் துணை புரிவேன்” என்றார். அப்போது, ஞானேந்திரர் குறுககிட்டு, “ஐயா! நீங்கள் சுகுமாரனுக்கு எப்படி உதவி செய்ய வேண்டும் என்பது அவனிடம் கேட்காதீர்கள். மகா மேதாவியாகிவிட்ட உங்கள் மகன் நம்பியிடம் அதைப்பற்றி கேளுங்கள்!” என்றார். பிறகு அவர் நம்பியை அழைத்து நடந்ததை எல்லாம் விவரித்தபின் அவனிடம் இது குறித்து அபிப்பிராயம் கேட்டார்.

அதற்கு நம்பி, “என் தந்தை மேற கொண்டு உதவி செய்ய விரும்பினால், அவர் சுகுமாரனுக்குப் பகைவராக மாறவேண்டும். இதுவே என் யோசனை!” என்றதும். மற்ற மூவரும் திடுக்கிட்டனர். “சுகுமாரா!”



என்று தொடர்ந்த நம்பி, “நீ இதுவரை என் தந்தை செய்த உதவிகளை மறந்துவிட்டு, அவரை உன் பகைவராக நினை! அவரைப் பழி வாங்க முயற்சி செய்! அவரைப் பழி வாங்கியபின் உன் கவனத்தை உன் சொந்தக்காரர்களிடம் திருப்பு! அவர்களைப் பழிவாங்கு!” என்றான்.

நம்பி கூறியதைக் கேட்டு அவன தந்தையும், சுகுமாரனும் அதிர்ச்சி அடைய, குரு மட்டும் அதைப் புரிந்து கொண்டவராய் புன்னகை புரிந்து அவன் யோசனையை அமோதித்தார். (முற்றும்)



### மோகனதாஸ் கரம்சந்த் காந்தி

**மகாத்மா காந்தி** என்று அன்புடன் அழைகக்கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்திய தன் காரணமாக இவர் **“விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை”** என்று அழைக்கப் படுகிறார். **சத்தியாக்கிரகம** என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்தியநாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் மற்ற சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு வழி காட்டியாக அமைந்தது. இவரது பிறந்தநாள் இந்தியாவில் **காந்தி ஜெயந்தி** என்று கொண்டாடப்படுகிறது.

இவரது 13 ஆவது வயதில் அக்கால வழக்கப்படி கஸ்தூரிபாய் என்ற பெண்ணை பெற்றோர் பால்ய விவாகம் செய்து வைத்தனர். இவர் பின்னர் தனது 18ஆம் வயதில் இங்கிலாந்து சென்று கல்விகற்று **பரிஸ்டர்** எனப்படும வழக்குரைஞர் பட்டம் பெற்றார்.

பகவத்கீதை, சமண சமய கொள்கைகள், லியோ டால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட காந்தி, சத்தியம், அகிம்சை ஆகிய கொள்கைகளை தன் வாழ்நாள் முழுவதும் விடாமல் கடைபிடித்தார்.

வாரத்திற்கு ஒருநாள் மௌன விரதம் மேற்கொள்வார். காந்திக்கு **“மகாத்மா”** என்னும் பட்டம் அளித்தவர் **இரவீந்திரநாத் தாகூர்.**

காந்தி குஜராத்தி மொழியில் எழுதிய சுயசரிதை, **சத்திய சோதனை** என்ற பெயரில் தமிழ் மொழியிலும் An Autobiography: The Story of My Experiments with Truth என்ற பெயரில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1947 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அன்று காந்தியைக் கொல்வதற்காக சதிமுயற்சி இடம்பெற்றது. ஆனாலும் அன்று அவர் உயிர் பிழைத்தார்.

காந்தி இறப்பதற்கு முந்திய தினம் வியாழக்கிழமை அவர் அணு ஆயதங்களைப் பற்றி இந்திரா காந்தியிடம் கூறியது: “அணுகுண்டை ஒருங்கே அமெரிக்கா தவிர்க்க வேண்டும். அகிம்சா வழிப்போராட்டம் ஒன்றை மட்டும் அணுகுண்டுகளால் அழிக்க முடியாது! மற்றும் ஒரு சமயம் அகிம்சா இயக்கம் ஒன்றுதான் மனித இனத்தின் கைவசமுள்ள மாபெரும சக்தி பெற்ற ஓர் ஆயுதம். பேரழிவுச் சக்தியுடைய எந்த யுத்த ஆயுதத்தையும் விட பெரியது அது!” என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்த தடவை ஜனவரி 30 ஆம் திகதி மாலை ஆப்தே, **கோட்சே** இருவரும் கைத்துப்பாக்கியை மறைத்துக்கொண்டு, காந்தியின் பிராத்தனை மைதானத்தில் நடமாடிக்கொண்டிருந்தனர். அன்று கோட்சே வெற்றி அடைந்தான். காந்தியைக் கொன்ற சதிகாரனாய்ச் சரித்திரத்தில் இடம்பெற்றான். 1948 மே 27 ஆம் திகதி **நாதூரம் கோட்சே**, ஆப்தே இருவரும் கொலைக் குற்றம்சாட்டப்பட்டு நவம்பர் 15 ஆம் திகதி துக்கிலிடப்பட்டனர்.

01.2014
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன்பாடாகியது.
- 1649 - முதலாம் சார்ல்ஸ் மன்னன் தூக்கிலிடப்பட்டான.
- 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.
- 1649 - இளவரசர் சார்ல்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சாரல்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.
- 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.
- 1948 - இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி இந்துத் தீவிரவாதியான நாதுராம் கோட்சேயினால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.
- 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.
- 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 5 பேர் மட்டக்களப்பு, வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32வது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர (இ. 1945)
- 1910 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ. 2000)

**இறப்புகள்**


- 1948 - மகாத்மா காந்தி, (பி. 1869)
- 1874 - இராமலிங்க அடிகளார், ஆன்மிகவாதி (பி. 1823)

**சிறப்பு நாள்**

இந்தியா - தியாகிகள் நாள்
உலக தொழுநோய் ஒழிப்பு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்


சட்டை முனிவர்

ஆதியில் சுந்தர பரதேசி என்ற பெயரில் இம்மலையில் குளிராட்டிப் பொய்கையருகே தவமிருந்த சிவ பெருதான் பின்னர் மதுரை சென்று சித்துக்கள் பல நிகழ்த்தி பின்னர் உதயகிரி சித்தராக மாவூற்றில் வந்து மாவூத்து மகாலிங்கராகத் தங்கி விட்டாராம்.

அதற்குப் பின்னர் சுந்தரானந்த முனிவர் சதுரகிரிக்கு வந்து தங்கி, தவமியற்றி, அதன்பின் திருமூலராக வடிவெடுத்து வீரசேனன் வடிவில் இல்லறம் நிகழ்த்தி பின்னர் சம்பு முனிவராக வடிவம் கொண்டதும், இந்தச் சதுரகிரிதான்.

சுந்தரானந்தரைத் தொடர்ந்து சட்டை முனி தவம் செய்ய சதுரகிரிக்கு வந்தார். அவரையடுத்து காலாங்கி நாதர், கோரக்கர், போகர், பிரம்மமுனி, இராமதேவர் என்று வரிசையாக சித்தர்கள் படையெடுக்கின்றனர். அவரவர்களுக்குத் தனித்தனி எல்லைகள், அவரவர் பெயரால் தனித்தனி வனங்கள்.

ஏறத்தாழ முப்பது வனங்களை சதுரகிரியில் கோரக்கரும், தல புராணமும் அறிமுகப்படுத்தினாலும் இந்த எண்ணிக்கையிலும் அதிகமான சித்தர் குகைகளும் ஆசிரமங்களும் மலைக்குள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அவைகளெல்லாம் சித்தர்களால் தடை செய்யப்பட்ட பகுதிகளில் இருப்பவை. அவர்களின் தடைகளை மீறி அவைகளை ஆராய முற்படும் ஆய்வாளர்களைத் திசை திருப்ப பல அரிய மூலிகைச் செடிகளும் காட்டு விலங்குக் காவல்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் சதுரகிரியில் எவற்றையெல்லாம் சித்தர்கள் அனுமதியுடன் தரிசிக்க வேண்டுமென்று பிராப்தம் இருக்கிறதோ அவைகளை மட்டுமே தரிசிக்க முடியும். அதிலும் தரிசிக்க எல்லாவற்றையும் மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்தவும் முடியாது.

தரிசித்தவை அந்தரங்கமானவை ஆயினும் அவைகளில் எவற்றையெல்லாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று உத்தரவு இருக்கிறதோ, அவைகளை மட்டுமே பகிர்ந்து கொள்ள இயலும்.

அனுமதித்தவை தரிசிக்கப்படுகிறது. அனுமதித்தவை அறிமுகப் படுத்தப்படுகிறது. அனுமதித்தவை அழைத்துச் சென்று காட்டப்படுகிறது. உணர்ந்தவை உணர்த்தப்படுகிறது.

சதுரகிரியின் சித்தர் தரிசனத்தை சதுரகிரிக்குப் பக்கத்திலிருக்கும் மதுரையிலிருந்து, மதுரையில் சித்து விளையாட்டுகள் நிகழ்த்திய சித்தர்களுக்கெல்லாம், சித்தராம் அந்த சிவசித்தரின் சித்துவிளையாட்டு அறிமுகத்துடன் நமது சதுரகிரி சித்தர்களின் தவ பூமியில் நாம் அடியெடுத்து வைப்போமாக.

### சிவசித்தர் நிகழ்த்திய சித்த ஜாலம்

சித்தர்களின் தவ பூமியான சதுரகிரியில் பதினெண் சித்தர்களும் தவ வாழ்வு வாழ்ந்து வரும் நிலையில் அந்தச் சித்தர் கூட்டத்தில் தாமும் ஒரு சித்தராக விருப்பம் கொண்டு, சதுரகிரியை நோக்கிப் புறப்பட்டார் சிவனாகிய சித்தர்

வடக்கே இருந்து சதுரகிரி வருபவர்களுக்கு மதுரைதான் நுழைவாயில். இங்கே இறங்கித்தான் சதுரகிரிக்குப் பயணப்பட வேண்டும். சதுரகிரியைப் பெருமைப்படுத்த கயிலையிலிருந்து புறப்பட்ட சிவபெருமான் போகிற போக்கில் சித்தராய் வடிவெடுத்து மதுரையில் பாண்டியனோடு நிகழ்த்திய சித்த ஜாலம் இது.

பாண்டியன் அரசவை அன்று


சுந்தரானந்த முனிவர்

ஆன்மீகம் 18

பரப்பரப்பாகக் காணப்பட்டது. ஆளாளுக்கு மதுரை மாநகரக் கடை வீதியில் சித்தர் ஒருவர் நடத்திய அதிசயங்களை விவரித்துக் கொண்டிருந்தனர்.

“மன்னா! அந்தச் சித்தர் மிகப் பொல்லாதவராகத்தான் இருக்க வேண்டும். வயதான கிழவர்களை வாலிபராக்குகிறார். கிழவிகளை அழகிய இளம் பெண்களாக்குகிறார். சிறியவர்களைப் பெரியவர்களாக்குகிறார். கூட்டத்தில் குறும்பு செய்த ஆண்களைப் பெண்களாக்கினார். பெண்களை ஆணாக்கினார். பின்னர், அவர்கள் மன்னிப்பு கேட்க பழைய வடிவத்திற்கே அவர்களை மாற்றி விட்டார்.


டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

30

ஒரு நாள் பகல் படப்பிடிப்பு நிலையம் போனேன். செம்மலின் ஒப்பனை


குடியிருந்த கோயில்

அறையிலிருந்து ஒரு பெண்ணை விஸ்வம் என்பவர் அழைத்துவந்து கொண்டிருந்தார். நான் உள்ளே போனதும் செம்மல் சொன்னார்.

“ரவீந்திரன், லிங்க் வச்சு எழுதுற மாதிரிதான், இந்தக் கடவுள் என்னிக்கோ நடக்கப்போறதை முன்கூட்டியே காட்டிடுறார். அந்தப் பெண்ணுக்கும் நமக்கும் லிங்க் இருக்குது. முன்னே ஒரு சமயம் பெங்களூர் வழியிலே ஒரு சின்ன பொண்ணு நடிக்க சான்ஸ் கேட்டாளே ஞாபகம் இருக்கா? அந்தப் பொண்ணுதான் இவ... வில்லனின் மகளா நடிக்கப் போறா...” என்றார்.

“ஆமாம்... முதல்லே படி. அப்புறமா நடின்னு நீங்க சொன்னீங்களே... உங்க வாக்கு பலிச்சுடுச்சு” என்று செம்மலிடம் சொன்னேன். (அந்த நடிகை தான்- பாரதி)

பன்னிரெண்டு நாட்களில் செம்மலுக்கு மூன்று சண்டை, மூன்று பாட்டு கதைக் காட்சிகளை படமாக்கினார் சங்கர்.

‘காசிக்குப் போகும் சன்யாசி’ பாட்டை ஒரே நாளில் எடுத்தார்கள்.


குடியிருந்த கோயில்

அந்தப் படம் சென்னை மிருகக் காட்சி சாலையிலும் படமாக்கப் பட்டது.

செம்மல் வளர்த்த இரண்டு சிங்கக் குட்டிகளில் ஒன்று இறந்த பின்னர் மற்றொன்றை மிருகக் காட்சிச் சாலைக்கு கொடுத்துவிட்டார்.

சிங்கக் கூண்டுக்கு அருகே வந்த செம்மல்... சிங்கத்துக்கு உணவு கொண்டு வந்த காவலாளியிடம், ஒரு துண்டு கறியை வாங்கி சிங்கத்திடம் நீட்டினார்.

குட்டியாக உள்ளபோதே அது பார்த்த பொன்முகம்... பல தடவை அதனை மடியில் வைத்துத் தடவிக் கொடுத்த நினைவில் அந்தச் சிங்கமும் பாசத்தோடு பார்த்தது.

கடிக்காமல் குதறாமல் கறித் துண்டை வாங்கிக் கொண்டது.

மிருகங்களை வைத்தே படமெடுத்து, அவைகளின் குணங்களைக் கண்டறிந்த தேவர் சொல்லுவார்:

“நன்றி எல்லா மிருகங்களுக்கும் உண்டு! ஆனால் எல்லா மனிதர்களிடமும் கிடையாது” என்று.

### குடியிருந்த கோயில்

யானையின் பலம் அதற்குத தெரியாது என்பது பழமொழி. குடியிருந்த கோயில் படத்தில் ஆடலுடன் பாடலைக் கேட்டு பாட்டுக்கு பாங்காரா நடனம் ஆட வேண்டும்.

உடலும் உயிரும் போல ராகமும்-பாடல் வரியும் நன்றாக அமைந்திருந்தன.

மெல்லிசை மன்னர், தங்கள் திறனையும் புலமையையும் காட்டியிருந்ததோடு, ஆலங்குடி சோமு நன்றாக நயத்துடன் அனுபவித்து எழுத பாவனையோடு பாடியிருந்தார்கள் சுசீலாவும் டி.எம்.சௌந்தரராஜனும்.

செம்மலுடன் சேர்ந்து ஆடுவதற்கு எல்.விஜயலட்சுமி ஒப்பந்தம் ஆகியிருந்தார். அவர், இளமையும் திறமையும் உள்ள நடிகை. அவருடன் ஆடத் தயங்கினார் செம்மல்.

“...எனக்கு நடனம்தெரியும். நாடகத்தில் கற்ற ஆட்டம் தான். இப்போது சண்டை போட உதவுகிறது. ஸ்டெப் என்பது இரண்டுக்கும் முக்கியம்.

விக்கிரமாதித்தன், மன்னாதி மன்னன் பட்த்திலே ஆடியிருக்கிறேன். பரத நாட்டியம்னா ஷாட்களிலே ஏமாத்திடலாம். இதிலே மூவ்மெண்ட் தவறிட்டா தப்பாயிடும்” என்றார்.

தயாரிப்பாளர் வேலுமணி எவ்வளவோ சொன்னார்.

டைரக்டர் கே.சங்கர் எவ்வளவோ சொன்னார். “உங்க திறமையிலே நம்பிக்கை இல்லாம பேசாதேங்தீங்க. நான் எடுத்துக்காட்டுறேன். பிடிக்கலேன்னா தூக்கி வைச்சிடுவோம்” என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூ. சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிவித்தல் விரைவில்

உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மார்ச் மாதத்தில் வெளியிடப்பட இருப்பதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்தது.

எல்லை நிர்ணய தேசிய குழுவின அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ள தோடு, மார்ச் முதற் பகுதியில் இது தொடர்பான அறிக்கை ஜனாதி பதிக்கு கையளிக்கப்பட இருப்பதாக அமைச்சின் செயலாளர் ரணவக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டம் கடந்த வருடம் திருத்தப்பட்டு தொகுதிவாரி முறையும் விகிதாசார முறையும் இணைத்து கலப்பு தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தபபட் டுள்ளது. இதன் அடிப்படையில் உள்ளூராட்சி எல்லை நிர்ணயத்துக் கென மாவட்ட மற்றும் தேசிய குழுக்கள் நியமிக்கப்பட்டு அது தொடர்பில் ஆராயப்பட்டது. சகல பிரதேசங்க ளுக்கும் சென்று பொதுமக்கள் பிர தேச முக்கியஸ்தர்கள், அரசியல் வாதிகள் போன்றோருடன் கலந்து ரையாடி எல்லை நிர்ணயம் குறித்து ஆராயப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் எல்லை நிர்ணய அறிக்கை தயாரிக்கப்பட் டுள்ளதாக தெரிவித்த அமைச்சின் செய லாளர், அமைச்சர் அதாவுல்லாவினால் இந்த அறிக்கை ஜனாதிபதிக்குக் கைய ளிக்கப்பட்ட பின் இது குறித்த வர்த் தமானி அறிவித்தல்' வெளியிடப்பட இருப்பதாக குறிப்பிட்டார்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிட ப்பட்ட பின் அடுத்து வரும் உள்ளூராட்சி தேர்தல்கள் புதிய எல்லைகளின் பிரகாரமே நடத்தப்பட உள்ளன. (அ-2)

## அரியாலையில் கலைவிழா

அரியாலையூர் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் நடத்தும் கலை விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் முத லாம் திகதி பி.ப 3 மணிக்கு யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் க.லலீசன் தலைமையில் நடைறெவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன், சிறப்பு விருந்தின ராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலா சாலையின் முன்னாள் விரிவுரை யாளர் திருமதி சாந்தினி சிவனேசன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் இசைத்துறை விரிவுரையாளர் மா. சிதம்பரநாதன் அகியோர் கலந்து கொள்வர்.

இதில் மாணவர்களின் நடன அரங்கம், தாளவாத்திய அரங்கம், சிறப்பு நிகழ்வாக க.கண்ணதாஸ் தயாரித்து வழங்கம் நாதசமர்ப் பணம் என்பன இடம்பெறும். (அ)

## கிழக்கு மாகாண சபையில் உறுப்பினர்கள் போராட்டம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண சபை நேற்று முன்தினம் காலை கூடிய போது தேநீர் இடைவேளையுடன் ஒத்தி வைக்கப்பட்டதால் அதனை எதிர்த்து தமிழத் தேசியக் கூட்டமைப்பின் கிழ க்கு மாகாண சபை அங்கத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

முகாமைத்துவ உதவியாளர் களை பணிக்கமர்த்தும் கிழக்கு மாகாண சபைப் பொதுப்பரீட்சைக்குத் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தும் குறைந்தளவான தமி ழர்களே உள்வாங்கப்பட்டுள்ளனர்.


கிழக்கின் நியமனங்களில் இன விகிதாசார அடிப்படையில் தமிழர்களை நியமிக்க முடியாதுள்ள தாக கிழக்கு மாகாண சபை தெரிவித் துள்ளது.

இதனால் தமிழர்களின் நியமனம தடைப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களும் சுமார் 84 சிங்களவர்களும் குறைந்தள வான தமிழர்களும் நியமனத்திற் காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டுள்ளனர்.

இதே வேளை அமைச்சுக்களின செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர் களின் நியமனங்களின் போதோ அல்லது ஆசிரிய நியமனங்களின் போதோ இவ்வாறான இன விகித அடிப்படை பின்பற்றப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்ட போது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளி யிட்டிருந்ததாக தெரிய வருகின் றது. (அ-2)





வலி.தென்.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வும் பரிசில் வழங்கும் வைபவமும் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந் தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# அதிகமான இரசாயன வகைகளை உபயோகிப்பதை நிறுத்துங்கள்

## விவசாயிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

**உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் நாடாக இலங்கையை உருவாக்கவும் விவசாயிகளுக்கு சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

விவசாயிகளுக்கான புதிய ஓய்வூ தியத்திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 பேருக்கு ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அம்பாந் தோட்டை ருஹுணு மாகம்புர சர்வதேச் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங்களையும் சேர்ந்த விவ சாயிகளுக்கு இதன்போது விவசாய ஓய்வூதியத்திற்கான காசோலையை வழங்கி உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

விவசாயிகளின் பேரில் தற்போது வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தவர்களே அன்று நெற் களஞ்சி யங்களை இல்லாதொழித்தனர்.

தற்போதைய அரசாங்கமே விவசாயத் துறையை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. அதன் ஒரு அம்சமாகவே விவசாய ஓய்வூதியத்திற்காக ஆயிரம மில்லி யன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தடைப்பட்டிருந்த விவசாயிகளுக் கான ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும ஆரம்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடை கின்றேன். ஒரு இலட்சத்து 28ஆயிர த்திற்கும் மேற்பட்ட விவசாயிகளு க்கு இத்திட்டம் பெரும் வரப்பிரசா தமாக அமைகின்றது.

நாட்டில் சுதந்திரத்துக்கு முன்பு விவசாயமே ஜீவனோபாய தொழிலாக இருந்தது. நாட்டில் 80 வீதமானோர் அப்போது விவசாயத்திலேயே ஈடுபட் டிருந்தனர்.

மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. ஏன் விவசாயம் செய்ய வேண்டும் என எண்ணிய காலம் ஒன்றிருந்தது. விவசாயிகள் கவனிக்கப்படாமல் வெளிநாடுகளி லிருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்பட்டது. கடனுக்கு மா கொள் வனவு செய்யப்பட்டது. வயல்கள் இல்லாதொழிக்கப்பட்டு ஹோட்டல்களும் கடைகளும் கட்டப்பட்ட யுகம் ஒன்றி ருந்தது.

இயந்திர உபகரணங்கள் இறக்கு மதியில் 50 வீத வரிச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. உலக சந்தையில் 9ஆயிரம் ரூபாவிற்கு உரம் விற்பனை செய்யப்பட்ட போதும் நமது விவசாயிகளுக்கு 350 ரூபாய்க்கு உரம் வழங்கப் பட்டதுடன், தொடர்ந்தும் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் தற்போது நாட்டில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஓய்வூதியமும் கேட்ட விவசாயிகளை துன்புறுத்திய காலத்தையும் விளைந்த நெல்லை உரிய விலைக்கு விற்க முடியாது விசம் அருந்தி விவசாயிகள் தற்கொலை செய்துகொண்ட யுகத் தையும் விவசாயிகள் மறந்துவிடக் கூடாது.

2005 இல் நாம் ஆட்சியை ஏற்ற போது நெல் 12 ரூபாவாகவே கொள் வனவு செய்யப்பட்டது.

நாம் தற்போது 36 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்கின்றோம். 1991 இல் ரணசிங்க பிரேமதாச நெல் சந்தைப்படுத்தும் சபையை இல்லா தொழித்தார்.

விவசாயிகள் கவனிக்கப்படாத யுகம்அது. விவசாய தன்னிறைவுமூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் யுகம் மீள உருவாக்கப்பட்டுள்ளது. நெல் மட்டுமன்றி சோளம், உழுந்து போன்றவற்றிலும் நாம் தற்போது தன்னிறைவு கண்டுள்ளோம். தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி களுக்கும் நாம் தற்போது மானிய ங்களை வழங்கி வருகின்றோம்.

கிழக்கில் மாவிலாறு மூடப்பட்டு ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்ட போது அரசாங்கம் அதில் தலையிட்டது. புலிகளை ஒழிக்கும் செயற்றிட்டம் அதிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது.

மூன்று வருடங்களுக்குப் பின் வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கும் அரசு சகல ஊக்குவிப்புகளையும் வழங்கி வருகிறது. நாம் வெளிநாட்டு உணவை நம்பியிராது இங்கு உற்பத்தி செய்ய வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பது முக்கியம்.

நாடு துண்டாடப்படாமல் ஐக்கிய இலங்கையை நாம் பாதுகாக்க வேண்டும்.

விவசாயிகள் இயற்கை அனர்த்த ங்களிலிருந்து தம்மைப் பாதுகாத் துக்கொள்ள சிறந்த முகாமைத்துவம் அவசியம். இரசாயன உரம் உபயோ கப்படுத்துவதை விவசாயிகள படிப் படியாக நிறுத்த வேண்டும்.

இதனால்உணவும்எமதுமண்ணும் பாதிக்கப்படுகின்றன. நாளை பிறக்க வுள்ள எமது குழந்தைகள் ஆரோக் கியமாக வளர வேண்டியது அவசியம்.

உலகிலேயே விவசாயத்திற்கு அதிகமாக இரசாயன்ங்களை உப யோகப்படுத்தும் நாடு இலங்கை தான். தேவைக்கு அதிகமாகவே இரசாயனம் பாவிக்கப்படுகிறது. நாமே எமது மக்களுக்கு நஞ்சூட்டக் கூடாது. எமது மண்ணில் நஞ்சை கலக்கக்கூடாது.

இது எமது எதிர்கால சந்ததியை யும் பாதிக்கும். படிப்படியாக இதிலிருந்து விடுபட எமது விவசாயிகள கவனம் செலுத்துவது முக்கியமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எடுத்த முயற்சியால் சுகாதார அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டு ஒப்பந்தகாரரிடம் வேலைத்தளம் கையளிக்கப் பட்டது.
கடந்த வாரத்தில் அதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் வேலணை பிரதேச வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றபோது...

# பரிந்துரைகளை அமுல்படுத்த மற்றுமொரு குழு அமைப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை மோதல் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த செயற்பாட்டு திட்டத்தை தயாரிக்க மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவின் தலைவராக அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஆகியோரும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் 17 பரிந்துரைகளை அமுல்படுத்தும் செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்க இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற இம்மோதல் சமபவத்தில் 27 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நிர்வாகிகள் தெரிவு

(பருத்தித்துறை)

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 26 ஆம் திகதி சனசமூக நிலைய உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் க.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக மு.ஜெகதேவன், செயலாளராக திருமதி லி.மதுராந்தகி, பொருளாளராக பெ.ஸ்ரீகிருஷ்ணா, உப தலைவராக சி.தில்லைநாதன், உப செயலாளராக பா.இரகுநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக க.கிருபாகரன், திருமதி த.குகேந்திரராணி, பா.அமலதாஸ், திருமதி கே.நாகேஷ்வரி, திருமதி கா.பவானி, திருமதி ஸ்ரீ.ரேணுகா ஆகியோரும் போஷகராக த.வதனரூபன், கணக்காய்வாளராக பா.அரியதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-2-10)

# மீனவர் பேச்சுவார்த்தை விபரம் மீன்பிடி அமைச்சரிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை - தமிழக மீனவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இருதரப்பினரும் ஏற்றுக்கொண்ட விடயங்கள் அடங்கிய ஆவணம் கடற்றொழில் அமைச்சர் டாக்டர் ராஜிதசேனாரட்னவிடம் கையளிக்கப்படும்.

தமிழகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் அதிகாலை கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமால் ஹெட்டியாராச்சி, அமைச்சின் ஆலோசகர் சுபசிங்க இருவரும் நாடு திரும்பினர்.

ஏனைய மீனவ பிரதிநிதிகள் நேற்று காலை நாடு திரும்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை நாடு திரும்பிய நிமால் ஹெட்டியாராச்சி அமைச்சு அலுவலகத்தில் பேச்சுவார்த்தையின் இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து விளக்கமளித்தார்.

இதேவேளை, தமிழகத்தின் சென்னையிலிருந்து மன்னார் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களுக்கு வழங்கப்பட்ட 14 நாட்கள் அவகாசம் மற்றும் இலங்கை கடற்பரப்பிலிருந்து எட்டு கடல் மைல் தொலைவுக்கு அப்பால் இருந்தே மீன் பிடிக்க வேண்டும்.

இல்லையேல் எமது கடற்படையினரை கைது செய்யுமாறு வலியுறுத்திவோம் போன்ற விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டு இருதரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளோம்.

இம்முறை வடபகுதி மீனவர்களுடன் இலங்கை அரசின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் ஊடாக இலங்கை மீனவர்களுக்கு சாதகமான முடிவு கிடைக்கும் என்றும நம்பிக்கை வெளியிட்டார். (அ-2)

# யாழ்.மாவட்டத்தில் 40 பேர் நியமனம்

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த நாற்பது முகாமைத்துவ உதவியாளர்கள் இம் மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இதன் பிரகாரம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒருவரும் கரவெட்டி பிரதேச செயலகத்தில் மூவரும் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் ஐவரும் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2-10)

# குடியேற்றவாசிகளின் வருகை குறைவடைந்துள்ளது-ஆஸி

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் நபர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக குறைந்துள்ளதாக கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு செல் லும் சட்டவிரோத குடியேற்றவாசி கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட விசேட குழு நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின் பிரகாரம் கடந்த 36 நாட்களில் சட்டவிரோத குடி யேற்றவாசிகள் எவரும் அவுஸ்திரேலியாவுக்கு செல்லவில்லை என தெரியவந்துள்ளதாக உயர்ஸ் தானிகராலயம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக செல்லும் குடியேற்றவாசிகளின் எண் ணிக்கை 80 வீதமாக குறைந்துள்ளது. இந் நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்லும் நபர் களை நவுறு மற்றும் மனுஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

அத்துடன் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அழைத்துச் செல்லும் நபர்களுக்கு எதிராக தொடர்ந்தும் கடும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் எடுக்கும் எனவும் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பொது வேட்பாளராக களம் இறங்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலல் பொது வேட்பாளராக களமிறங்கும் எண்ணம் தற்போதைக்கு எனக்கு இல்லை.

ஆனால் அனைத்து விடயங்களும் விநாடிக்கு விநாடி மாற்றமடையும் என்பது சிறந்த பௌத்தர் என்ற ரீதியில் எமக்குத் தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தெற்காசியாகொள்கை மற்றும் ஆய்வு நிறுவனத்தின் மத நல்லிணக்கம் தொடர்பான கருத்தரங்கின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

அவ்வாறு மாற்றமடை வதற்கும் தற்போதைக்கு நிலைமைகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

**கேள்வி :** அரசியலில் உங்களைப் பற்றி தற்போது அதிகம் பேசப்படுகின்றது. அதாவது நீங்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கப் போவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** இது இந்த இடத்துக்கு பொருத்தமான கேள்வியாக தெரியவில்லையே.

**கேள்வி:** இல்லை. அரசியல் கேள்வியாகத்தான் இதனை கேட்கின்றோம்.

**பதில்:** அவ்வாறு பொது வேட்பாளராக வரும் எந்த நோக்கமும் தற்போது என்னிடம் இல்லை. பலர் என்னிடம் இது தொடர்பில் கோரிக்கை வடுக்கின்றனர். ஆனால் எனக்கு அவவாறான எண்ணம் எதுவும் இல்லை.

**கேள்வி :** உங்கள் எண்ணம் மாற்றமடைவதற்கான சாத்தியம் உள்ளதா?

**பதில்:** சிறந்த பௌத்தன் என்ற ரீதியில் அனைத்தும் மாற்றமடையும் என்று கேட்டுள்ளீர்கள் தானே? அதாவது விநாடிக்கு விநாடி அனைத்தும் மாற்றமடையும் என்று கேள்விபட்டுள்ளீர்கள் தானே? எனவே அதனை கூற முடியாது. ஆனால் தற்போதைக்கு மாற்றமடையும் நிலைமையும் காணப்படவில்லை. (அ-2)

# ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய முயன்ற நபர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற நபர் கைது செய்யப்பட்டார்.

கண்டியிலுள்ள ஜனாதப்பதியின் மாளிகைக்குள் நேற்றுமுன்தினம் மாலை அத்துமீறி நுழைய முயன்ற நபர் ஒருவரை அங்கிருந்த பாதுகாப்பு தரப்பினர் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டையை சேர்ந்த குறித்த நபர் தனது பிள்ளையை பாடசாலைக்கு தரம் ஒன்றுக்கு சேர்க்காமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடுவதற்கே உள் நுழைய முயன்றதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் கண்டி, மனநல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் மனநல வைத்திய அறிக்கை கிடைத்ததன் பின்னர் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# கலை வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தினால் நடத்தப்படும் இலவச கலை வகுப்புக்களில் இணைந்து பயிற்சி பெற விரும்பும் தரம் ஒன்று மற்றும் 5 வயது மாணவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுமதிகளைப்பெற்றுக்கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

முடிவுத் திகதிக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும் யோகாசனமும் தியானமும் மாலைகட்டுதல், கோலம் போடுதல், தோரணம் செய்தல் போன்ற இலவச வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. (அ-2)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு சீனா உதவும்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தொடர்ந்து ஏற்படும் கோளாறு தொடர்பில் தீர்வு காண்பதற்கு தேவையான சகல உதவிகளையும் வழங்க சீனா உறுதியளித்துள்ளது.

இதற்குத் தேவையான நிபுணர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் தற்போதைய நிலைமை குறித்து மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கும் சீன தூதரக அதிகாரிகளுக்குமடையில் விசேட பேச்சுவார்த்தை இடம்பெற்றது.


மின்சக்தி எரிசக்தி அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை செயற்றிறன் மிக்கதாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

மின் நிலைய பிரதான இயந்திரம் மற்றும் உபகரணங்களின் நிலைமை குறித்து ஆராய்யவும் அவற்றிலுள்ள கோளாறுகளை அடையாளங் கண்டு திருத்தவும் இதன் போது இணக்கம் காணப்பட்டதாக அமைச்சு தெரிவித்தது.

இச் சந்திப்பில் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, அமைச்சின் செயலாளர் பேர்டினன் டால், மின்சார சபை தலைவர் டபிள்யூ. பி. கனேகல ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகிள், அப்பிள் ஆதிக்கத்திற்கு எதிராக, அமெரிக்க மக்கள்... போராட்டம்....!



வால் வீதியும், நிதித்துறை நிறுவனங்களும், பங்குச் சந்தைகளும் கொடிகட்டிப் பறப்பது அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள நியூயோர்க் மாநகரில் என்றால், 19-ம் நூற்றாண்டு தங்க வேட்டையினால் வளர்ச்சியடைந்து, கடந்த 20 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் உலகத் தலைநகராக உருவாகியிருப்பது மேற்குக் கடற்கரையில் இருக்கும் கலிஃபோர்னியா மாநிலத்தில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரம்.



அப்பிள் ஊழியர்கள் நிரம்பிய பேருந்தை மறித்து போராட்டம்

**சான்பிரான்சிஸ்கோ ஆர்ப் பாட்டம**

சான்பிரான்சிஸ்கோ மாநகராட்சி முன்பு, ஜனவரி 21 அன்று நடந்த ஆர்ப்பாட்டம்.

சான்பிரான்சிஸ்கோ மாநகராட்சியில் கடந்த 21-ம் தேதி இதுவரை கேள்விப்பட்டிராத புது பிரச்சினை தொடர்பாக பொது கருத்துக் கேட்பு ஒன்று நடைபெற்றது. மாநகரின் பொதுப் போக்குவரத்து பேருந்து நிறுத்தங்களில், சிலிக்கன் பள்ளத்தாக்கில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஊழியர்களை அள்ளிச் செல்லும் தனியார் பேருந்துகளை தொடர்ந்து அவ்வாறு பயன்படுத்துவதற்கு கட்டணம் வசூலித்து -அனுமதிக்கலாமா, அல்லது அவற்றை தடை செய்ய வேண்டுமா என்பது மீதான கருதத்துக் கேட்புதான் அது.

சான்பிரான்சிஸ்கோ மாநகரின் பேருந்து நிறுத்தங்களில் காலையிலும், மாலையிலும் பொதுப போக்குவரத்து பேருந்துகளை காத்திருக்க வைத்துவிட்டு அதிக உயரத்தில் வெண்ணிற உடம்பு, கறுப்பாக்கப்பட்ட கண்ணாடி ஜன்னல்களுடனான வெளிப்புறமும் குளிரூட்டப்பட்ட, சொகுசு இருக்கைகளுடன் கூடிய, மடிக்கணினியை வைத்து வேலை செய்ய மடிப்பு மேசையும், மின் இணைப்புகளும் பொருத்தப்பட்ட, கம்பியில்லா இணைய இணைப்புடன் கூடிய உட்புறமும் கொண்ட பேருந்துகள் வந்து நிற்கின்றன. அவற்றை இயக்கும் கார்ப்பரேட் நிறுவனத்தின் பெயர் கூட எங்கும் எழுதப்படாமல், முன் பக்கக் கண்ணாடியில் சிறு பலகையில் தலைமை அலுவலகத்தின் பெயர் மட்டும் குறிப்பிட்டு வெளிக்கிரகத்திலிருந்து வந்திறங்கிய அதிகார வர்க்கத்தினர் நகர் வலம் வருவதைப் போல சான் பிரான்சிஸ்கோ வீதிகளில் கோலோசுகின்றனர். இந்தக் காட்சிகள் சென்னையின் சோழிங்கநல்லூர் அல்லது வடபழனி அல்லது சைதாப் பேட்டை பேருந்து நிறுத்தங்களை நினைவூட்டினாலும் தவறில்லை தான்.

**கூகிள் பஸ்**

கூகிள் வளாகத்துக்கு போகும் பேருந்தில் ஏறும் பயணிகள்.

சாதாரண பேருந்துகளைப் போல இரண்டு வாசல்கள் இல்லாமல் முன்பக்கம் ஒரே ஒரு கதவு மட்டும் உள்ளதால், அவற்றில் ஆள் ஏறி, இறங்குவதற்கு இரண்டு மடங்கு நேரம் பிடிக்கிறது. அவை தம் வேலையை முடித்து விட்டு நகரும் வரை மற்ற 'சாதாரண' நகர மக்களுக்கான பேருந்துகள் பணிவாக காத்திருக்க வேண்டியதுதான்.

இதே பேருந்து நிறுத்துமிடங்களில் தனியார் வாடகை கார்கள் நின்று பயணிகளை ஏற்றவோ, இறக்கவோ செய்தால் அவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், தனியார் கார்ப்பரேட் பெரு நிறுவனங்களின் இந்த பேருந்துகள் தம் விருப்பப்படி கட்டணம் இல்லாமல் பொது வசதியை பயன்படுத்தி வந்திருக்கின்றன.

"இது எல்லாம் ஒரு விஷயமா? மாநகரிலிருந்து சுமார் 60 முதல் 80 கிலோமீட்டர் தொலைவில் சிலிக்கன் பள்ளத்தாக்கில் உள்ள நிறுவனங்களுக்கு ஒவ்வொருவரும் சொந்தக் காரில் போனால் எவ்வளவு போக்குவரத்து நெரிசல் ஏற்படும்? எவ்வளவு எரிபொருள் வீணாகும்? அந்த வீணடித்தல்களை தவிர்த்து இப்படிப்பட்ட பேருந்துகளை இயக்குவது சமூகப் பொறுப்புள்ள நடவடிக்கை என்று பாராட்டாமல் எங்களை கரித்துக் கொட்டுகிறீர்களே" என்று நொந்து கொள்கின்றன கூகிள், ஆப்பிள் முதலான அந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள்.

அவர்கள் சொல்லாத இன்னொரு விஷயம், 80 கிலோமீட்டர் தூரத்திற்கு தமது சொந்தக் காரை ஓட்டிக் கொண்டு அலுவலகத்துக்கு வருவதை விட, வீட்டிற்கு அருகிலேயே நிறுவன பேருந்தில் ஏறி அலுங்காமல் குலுங்காமல் கொண்டு வந்து சேர்த்தால் ஊழியர் வேலை செய்யத் தயாராக இருப்பார். கூடுதல போனசாக, பேருந்திலேயே மடிக்கணினி, இணைய இணைப்பு வசதி செய்து கொடுத்து அலுவலகத்துக்கு வரும் முன்பாகவே அவர்கள் வேலையை தொடங்குவதற்கும் ஏற்பாடு செய்து கொள்ள முடிகிறது.

கூகிள் இப்படி ஊழியர்களின் கடைசி நிமிடத் துளி வரை வேலை வாங்கும் சாத்தியங்களை ஆய்வு செய்வதில் கூகிள் முதலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பிரசித்தி பெற்றவை. 20 வயதுகளில் இளைஞர்களை உள்ளிழுத்து தேவைபட்டால் குட்டித் தூக்கம் போட படுக்கைகள், ஐந்து நட்சத்திர தரத்திலான இலவச உணவு, துணிதுவைககும் சேவை முதல் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து வாரத்துக்கு 60 அல்லது 74 மணி நேரம் வேலை வாங்குவதில் கில்லாடிகள் இந்நிறுவனங்கள். இந்தியாவிலும் ஆரம்பத்தில் இது போன்ற சலுகைகளை கொடுத்து பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு அவற்றை படிப்படியாக ஒழித்துக் கட்டியிருக்கின்றன தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள்.

நோக்கம் என்னவாக இருந்தாலும், சான்பிரான்சிஸ்கோ நகரினுள் பொலிகாளைகள் போல சுற்றிக் கொண்டிருந்த இந்த பேருந்துகளும், அவற்றில் பயணிக்கும் வேற்று கிரகத்தவர்களை போல தோன்றும் கார்ப்பரேட் ஊழியர்களும் பல 'பொறாமை' பிடித்த நகரவாசிகளின் கண்களை உறுத்தியிருக்கின்றன.

இந்த பேருந்துகளிலிருந்து இறங்கிப் போகும் மிடுக்காக உடை உடுத்திய நபர்கள், பேருந்திலிருந்து வெளிச்சத்துக்கு வந்து கண்கள் கூச, ஏதோ தெரியாத இடத்துக்கு வந்தவரகளைப் போல நடந்து தத்தமது வீடுகளை நோக்கி போகிறார்கள். அவர்களில் பலர் இந்தப் பகுதிக்குப் புதியவர்கள். பெரும்பாலும் இந்தியா, சீனாவைச் சேர்ந்த இளைஞரகள், 40-50 வயதுகளில் யாரையும் இவர்கள் மத்தியில் பார்ப்பது அரிது. இந்தத் துறையில் 50 வயதுக்கு மேல் ஒருவர் புராதன சின்னமாகி விடுகிறார்.

கடந்த டிசம்பர் 10-ம் தேதி "பொதுப் பணம், தனியார் லாபம்", "பொது வசதிகளை சட்ட விரோதமாக பயன்படுத்துவதை நிறுத்து" "வீடு பறித்தல்களை உடனே நிறுத்து" என்ற அட்டைகளைப் பிடித்த போராடக்காரர்கள் கூகிள் ஊழியர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த பேருந்தை வழி மறித்தனர். இதைத தொடர்ந்து டிசம்பர் 20-ம் தேதி 70 முதல் 100 ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆப்பிள் நிறுவனத்தின் பேருந்தை மறித்து போராட்டம் நடத்தினர். "கட்டுப்படியாகும் வீட்டு வசதிக்கு இறுதி அஞ்சலி" என்று எழுதப்பட்ட கல்லறைகளில் பொருத்தும் நினைவுகல் ஒன்றையும் தூக்கிப் பிடித்திருந்தனர்.

சான்பிரான்சிஸ்கோவை அடுத்த


எச்சரிக்கை பொது வசதிக்களை சட்ட விரோதமாகப் பயன்படுத்துகிறார்கள்

ஒக்லாந்தில் கூகிள் பேருந்தின் பின் பக்கக் கதவில் கல் எறியப்பட்டு கண்ணாடி உடைக்கப்பட்டது டயர் கிழிக்கப்பட்டது. "பேருந்திலிருந்து வெளியில் வந்து எங்களுடன் சேர்ந்து போராடுங்கள்" என்று பேருந்தில் பயணம் செய்யும் கார்ப்பரேட் ஊழியர்களை பார்த்து கூச்சலிட்டனர் போராட்டக்காரர்கள்.

பேருந்துகளில் உட்கார்ந்திருந்த ஊழியர்கள் நாம் என்ன தவறு செய்து விட்டோம் என்று திகைத்துப் போனார்கள் என்ன நடக்கிறது என்று புரியாமல் விழித்தார்கள்.

பொதுப் பேருந்துகள் ஓரிரு நிமிடங்கள் காத்திருக்க நேர்வது மட்டும் பிரச்சினையில்லை. அதை விட பல மடங்கு தீவிரமான பிரச்சினைகளின் விளிம்புதான் இந்த சொகுசு பேருந்து சேவைகளும், அவை பேருந்து நிறுத்தங்களை இலவசமாக தற்காலிகமாக ஆக்கிரமித்துக் கொள்வதும்.

**பேருந்து அடையாளம்**

சிறிய எழுத்துக்களில் நிறுவனத தின் அலுவலக அடையாளத்தை காட்டும் பேருந்து முகப்பு.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி தொடங்கிய கடந்த 25 ஆண்டுகளில் சான்பிரான்சிஸ்கோவிற்கு தெற்கே அமைந்திருக்கும் சிலிக்கன் பள்ளத்தாக்கில் உருவாகியுள்ள 1,700-க்கும் அதிகமான தொழில்நுட்ப நிறுவனங்களில் 44,000 ஊழியர்கள் பணி புரிகின்றனர். இவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து சலித்து எடுக்கப்பட்ட தொழில நுட்ப பட்டதாரிகள்.

இந்த தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் சான்பிரான்சிஸ்கோ நகரில் குடியேற ஆரம்பித்தது முதல் வீட்டு வசதி சந்தை வெகுவாக புரட்டிப் போடப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக வசிப்பவர்கள் கூட வாடகைக்கு வீடு தேடும் போது, விளம்பரங்களை பார்த்து சில மணி நேரங்களுக்குள் உரிமையாளரை தொடர்பு கொண்டால் தான் வீட்டைப் பார்க்கக் கூட வாய்ப்பு கிடைக்கிறது. பெரும்பாலான வாடகை அல்லது விற்பனை வீட்டு விளம்பரங்களில் கூகிள் அல்லது ஆப்பிள் பேருந்து நிறுத்தங்கள் அருகில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வீடு பார்க்கப் போகும் போது, மாணவர்கள் போல தோற்றமளிக்கும் இளைஞரகள் திருவிழாக் கூட்டம் போல வந்திறங்கியிருக்கின்றனர். "வீட்டு வாடகை எவ்வளவு வேண்டும்? கூடுதலா 10% வச்சுக்கோங்க, அட்வான்ஸ் ஒரு வருட வாடகை கூட கொடுத்து விடுகிறேன், நோ பிராப்ளம்" என்று காசோலையை கிழித்துக் கொடுத்து இடத்தைப் பிடித்துக் கொள்கின்றனர்.

நகரில் பணி புரியும், சாதாரண சம்பளம் ஈட்டும் காவல் துறையினர், நகர சபை ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், உணவக ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், கடைக்காரர்கள், சிறு நிறுவன ஊழியர்கள் யாரும் லட்சக்கணக்கான டாலர்கள் சம்பாதிக்கும் இந்த 'வெளிகிரகத்து' மேட்டுக்குடியினருடன் போட்டியிட முடியாமல் போகும் நிலைமை ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. அவர்களில் பலர் 'சந்தை சக்திகளால்', தமது வீடுகளிலிருந்து துரத்தப்பட்டு வருகின்றனர்.... *(தொடரும்)*

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களுக்கிடையில் பிணக்குகளை ஏற்படுத்த சிறு பிரிவினர் முயற்சி

**மதங்களுக்கு இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி மக்களை குழப்புவதற்கு இன்று சிறு பிரிவினர் முயற்சிக்கின்றனர். ஆனால் அது மதங்கள் மீதான பற்றினால் செய்யப்படுவதில்லை. மாறாக தம்மீது இருக்கின்ற பற்றின் காரணமாகவே இவ்வாறு செய்கின்றனர் என்று கத்தோலிக்கத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத நல்லிணக்கம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எந்தவொரு மதமும் கொலை செய்யுமாறோ அல்லது திருட்டு செயலில் ஈடுபடுமாறோ கூறவில்லை. மதங்களுக்கு இடையில் காணப்படுகின்ற வேற்றுமைகளிலும் பார்க்க ஒற்றுமைகளே அதிகம் உள்ளன. மதங்களை பாதுகாப்பதற்காக ஏனைய மதங்களுக்கு எதிராக வன்முறைகளை மேற்கொள்ளக்கூடாது .

தெற்காசிய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்த செயலமர்வில் நாட்டில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்து வது தொடர்பான பரிந்துரை தொகுதி ஒன்றும் வெளியிடப்பட்டது.

நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மதத் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

வரலாற்றில் எமது நாட்டில் அனைத்து மதங்களும் மிகவும் ஒற்றுமையாக இருந்துள்ளன. அநுராதபுரம் யுகத்தில் இலங்கையில் யக்ஷதர்கள் இருந்துள்ளனர.

அவர்கள் அரசவையிலும் இருந்துள்ளனர். அத்துடன் 1915 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவத்தின்போது மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டனர். கத்தோலிக்க திருச்சபை அன்று முன்வந்து வழங்கிய ஆரோக்கியமான பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

ஆனால் அவ்வாறான வரலாறு தெரியாதவர்கள் இன்று மதங்களுக்கு இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி மக்களை குழப்புவதற்கு இன்று சிறு பிரிவினர் முயற்சிக்கின்றனர். ஆனால் அது மதங்கள் மீதான பற்றினால் செய்யப்படுவதில்லை. மாறாக தம்மீது இருக்கின்ற பற்றின் காரணமாகவே இவ்வாறு செய்கின்றனர்.

தமது மதங்களை பாதுகாப்பதற்காக ஏனைய மதங்களுக்கு எதிராக வன்முறைகளை மேற்கொள்ளக் கூடாது.

கடந்த 30 வருடகாலமாக பாரிய பிரச்சினை காரணமாக பல்வேறு பாதிப்புக்களை எதிர் கொண்டோம். இலங்கையில் மட்டுமல்ல ஆசியாவின் வேறு நாடுகளிலும் இவ்வாறான பிரச்சினைகள் இருந்துள்ளன.

இது அரசியல் பிரச்சினை அல்ல. எமது நாட்டின் எதிர்காலம் தொடர்பான விவகாரம். ஆரோக்கியமான எதிர்காலத்தை அடைந்து கொள்ள எமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

எனவே, இங்கு மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை, கொட்டுகொட தம்மாவாச தேரர் உரையாற்றுகையில்,

நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த வரலாறு உள்ளது. ஆனால், தற்போது மத ரீதியில் சில சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சிப்பது தொடர்பில் நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். பிரச்சினைகளை தோற்றுவிக்கும் பிரிவினர் உலகில் எப்போதும் இருந்துள்ளனர்.

தற்போதும் அவ்வாறான முயற் சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். குழப்பத்தை ஏற்படுத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன.

அரசியல் சக்திகள் இவ்வாறு பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிப்பார்கள். இவற்றை புரிந்து கொண்டு நாம் செயற்பட வேண்டும். மதத் தலைவர்கள் இணைந்து பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்றார்.

இதேவேளை, கருத்தரங்கில் குகானந்த ஷர்மா குருக்கள் உரையாற்றுகையில்,

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா நாட்டில் இருக்கவில்லை. ஆனால், சம்பவம் கேள்விப்பட்டவுடன் அவர் நாடு திரும்பினார். அனர்த்தங்களை பார்த்துவிட்டு ஐந்து நாட்கள் கழித்து சந்திரிகா குமாரதுங்க மத வைபவம் ஒன்றை நடத்தினார்.

அதுபோன்று இன்றும் அவர் ஒரு கூட்டத்தை தற்போது நடத்துகின்றார். தற்போதைய நிலைமையில் நாட்டில் சில மதஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரதேச மக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும் என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய இஸ்லாம் மதத்தின் மாஹிர் மௌலவி குறிப்பிடுகையில்,

காலத்துக்கு ஏற்ற ஒரு முக்கிய விடயத்தை தெற்காசிய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனம் மேற் கொண்டுள்ளது.

நாட்டில் அபிவிருத்தி இடம்பெறுகின்றமை எங்களுக்குத் தெரிகின்றது. ஆனால், எமது மனது மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே இந்த அபிவிருத்தியின் பயனை எம்மால் அனுபவிக்க முடியும் என்றார். (அ-2)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவச ரெலிமெயில் சேவை

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக ரெலிமெயில் சேவை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை தபால் திணைக்களம் கடந்த ஒக்டோபர் மாதம் தந்தி சேவையை நிறுத்தியது. இதனையடுத்து ரெலிமெயில் சேவைகளை சிறந்த முறையில் முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம் ரெலிமெயில் சேவையில் முதல் 10 வார்த்தைகளுக்கு 20 ரூபா அறவிடப்படுவதுடன் மேலதிகமான ஒரு வார்த்தைக்கு 1.50 சதம் அறவிடப்படுகிறது. இதனை தவிர 10 ரூபா நிரந்தர கட்டணம் அறவிடப்படுவதுடன், விநியோக கட்டணமாக 15 ரூபா அறவிடப்படுகிறது.

தபால் திணைக்களம் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரெலிமெயில் சேவையை இலவசமாக வழங்க தீர்மானித்துள்ளது. (அ-2)



யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் கடந்த 19 ஆம் திகதி *Management Studies Commerce Alumni Association* எனும் அமைப்பினை சட்டபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இவ்வமைப்பின் காப்பாளராக அப்பீடத்தின் பீடாதிபதி ரி.வேல்நம்பி, தலைவராக ரி.ராஜஹிகாந்தன், செயலாளராக ஏ.நிதர்சன் , பொருளாளராக கலாநிதி பி.நிமலதாசன் ஆகியோரும் மற்றும் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களைப் படத்தில் காணலாம்.

# கூட்டமைப்பின் தீர்மானம் நாட்டுக்கு பாதகமானது

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் சிலர் வெளிநாட்டு சக்திகளை பாதுகாத்து வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளை பாதுகாக்கும் தந்திர பாதுகாவலர்கள் ஆளும் கட்சியிலும் அங்கம் வகிக்கின்றனர்.

மாகாணசபை அதிகாரங்களை குறைக்காமல் வடக்குத் தேர்தல்களை நடத்தக் கூடாது என நாம் கோரியிருந்தோம்.

சில ஆளும் கட்சி அமைச்சர்கள் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நாம் கோரியது போன்றே இனறு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.

வட மாகாணசபையில் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி சில தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானங்கள் நாட்டுக்கு பாதகமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் போது இவர்கள் வாயை மூடிக் கொண்டு அமைதி பேண வேண்டும்.

மாறாக அரசியல் நட்பின் அடிப்படையில் நாட்டுக்கு எதிரான விடயங்களுக்காக குரல் கொடுக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பது பற்றி என்னால் கருத்து வெளியிட முடியாது. அதை அமைச்சரவைப் பேச்சாளரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார். (அ-2)

# அரசாங்கம் தொலைபேசி உரையாடலை ஒட்டுக்கேட்கிறது

## சஜித் எம்.பி. குற்றச்சாட்டு

அரசாங்கம் இரகசிய உளவுப் பிரிவினைப் பயன்படுத்தி தகவல்களை திரட்டுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

லுனுகம்வெஹர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த அரசாங்கம் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கின்றது எனவும், இரகசியப் புலனாய்வுப் பிரிவை உருவாக்கி தகவல்களை திரட்டிக் கொள்கிறது.

இதன் காரணமாகவே அரசாங்கத்திற்கு சகலதும் தெரிகின்றது.

தேர்தல் ஆணையாளருக்கு முன்னதாக அமைச்சர்களுக்கு தேர்தல் நடைபெறப் போகும் தினம் பற்றி தெரியும்.

அரசாங்கம் மக்களின் பணத்தை கொள்ளையிட்டு வருகிறது. அத்துடன் போலி நிதி நிறுவனங்களை அரசாங்கம் நடத்தி வருகிறது.

அரசாங்கத்திற்கு தெரியாதது என்னவென்றால் நாட்டில் சக்வித்தி ரணசிங்க போன்ற பல்வேறு மோசடிக்காரர்கள் இருக்கின்றார்கள் என்பது மட்டுமே என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்களும் சமூக மதிப்புகளும்

அறிமுகம்

இன்றைய அறிவியல் யுகத்தில் பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்களும் தொழில் வாய்ப்புகளும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. கல்வித்துறையில் ஆழமாகக் கால் பதித்த பெண்கள் சமூகத்தில் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் சமுதாயத்தில் பெண்கள் பல்வேறு காரணங்களால் நசுக்கப்பட்டு வந்த நிலை மாற்றமடைந்து இன்று மன வலிமை படைத்த வீரப் பெண்களாக எந்தவொரு செயலிலும் மிகவும் உறுதியாகவும் திறமையாகவும் செயற்படும் திறன் கொண்டவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

ஓர் ஆணுக்குத் தரப்படும் கல்வி எப்படி அவனுடைய தனித்தன்மைகளை வெளிக் கொணர்வதாக சமூக மேம்பாட்டிற்கு அவனுடைய பங்கினை உணர்த்துவதாக அமைந்துள்ளதோ அதே போலவே பெண்களுக்கும் அவர்களுடைய தனித்தன்மைகளை வெளிப்படுத்தி நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை நோக்கி நடைபோடும் நிலையைப் பெண்களின் இன்றைய வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

உலகின் சமூக பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைகளில் முக்கிய பங்களிப்பினைப் பெண் மனிதவளம் வழங்கி வருகின்றது.

குழந்தைகளைப் பெறுதல், பேணுதல் என்ற பொறுப்புக்களினடிப்படையில் பெண்களின் குடும்ப, சமூக, பொருளாதாரத் தொடர்பு ஆண்களைவிட வேறுபட்டதாகவும் முக்கியமானதாயும் விளங்குகின்றது. சமூகத்தின் பொறுப்புக்களை ஏற்று அதனை நடைமுறைப்படுத்தும் நிலையில் பெண் என்பவள் அதிகம் குடும்பச் சுமைகளைச் சுமப்பவளாக இருக்கிறாள்.

பெண் பிள்ளைகளின் கல்வி நிலை

பெண் பிள்ளைகளுக்கு கல்வியறிவு ஊட்டுதல் தொடர்பாக ஏற்படக்கூடிய பல்வேறு நன்மைகள் உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பெண் பிள்ளைகள் கல்வியறிவு பெறுவதன் மூலம் பல நன்மைகளைச் சமூகம் எதிர்கொள்கின்றது.

அவர்கள் எதிர்காலத்தில் தாய்மார் ஆகும் போது நல்ல படிப்பறிவுள்ள தாய்மாரின் பிள்ளைகள் போசாக்கு உடையவர்களாகவும் நோய் நொடிகளால் பீடிக்கப்படாதவர்களாகவும் ஆகின்றார்கள். பெண்கள் அதிகமாகக் கற்கும் போது அவர்களின் திருமண வயது பிற்போடப்படுகின்றது.

இதனால் இளவயதுத் திருமணம் தடைப்படுகின்றது. இன்று பாடசாலைகளும் பாட விதானங்களும் பெண்ணியல் உணர்வுடையனவாக அமைந்து விடுகின்றன. ஆரம்ப காலங்களில் எல்லோர்க்கும் கல்வி என்னும் இலட்சியத்திற்கு தடையாக விளங்கியது பெண் பிள்ளைகளுக்குப் பாகுபாடு காட்டிய தன்மையாகும்.

இன்று பெண்ணியல் உணர்வென்பது கல்விப் புரட்சியின் ஓர் அம்சம் மட்டுமல்லாமல் அதன் ஒவ்வோர் இழையிலும் அதன்சாயல் தெரிகின்றது. இடைக்காலங்களில் பாடசாலை, பிள்ளைகளின் இருப்பிடங்களுக்கு அண்மையில் அமையாத நிலையில் பெண் பிள்ளைகள் மிகத்தூரம் சென்று கல்வி கற்பதில் பெருஞ்சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இன்று பாடசாலைகள் சமுதாயத்தின் நடுவில் அமைந்துள்ளதால் பெண் பிள்ளைகளும் எவ்வித தடங்கலுமின்றிக் கல்வி கற்கும் நிலையைக் காண முடிகின்றது.



கல்வித் தரிசனம்

பெண்களுக்குத் திருமணத்தின் போது வரதட்சணை கொடுக்கும் முறை இருந்ததால் மீண்டும் அவர்களுக்கும் கல்விச் செலவையும் ஏற்கத் தயங்கிய பெற்றோர்களும் உண்டு. இதனால் பெண்ணின் கல்வி இடைநிறுத்தப்பட்டது. இன்று திருமண வயது உயர்த்தப்பட்டாலும் திருமண முறையில் மாற்றங்கள் ஏற்படுவதாலும் இந் நிலைகள் பெண்களின் கல்வி தொடர்பாக பெரியளவு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

எல்லாப் பிள்ளைகளினதும் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் கடப்பாடும், எல்லோருக்கும் ஆண், பெண் என்ற வேறுபாடின்றிக் கல்வியை வழங்கும் பொறுப்பும் தேசிய அரசைச் சார்ந்தன என்றாலும் இப் பரந்த விரிந்த கடப்பாட்டை நிறைவேற்றுவதில் வேறு பல அம்சங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பெண்களின் கல்வி முன்னேற்றம், அதன் வழியான பெண் மனிதவள மேம்பாடு தொடர்பான அபிப்பிராயங்களை உருவாக்கி சமூக ஆதரவைத் திரட்டுவதிலும் அரசை வற்புறுத்துவதிலும் வெகுசன தொடர்புச் சாதனங்கள் பெரும்பங்கு வகித்து வருகின்றன.

பெண்கள் ஆண்களுக்குச் சமமான மனித வளம் என்பதை ஆண்கள் அறிவு ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளும் அதேவேளையில் அவர்களுக்கான சம கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்கு கல்வி நிறுவனங்கள் தமது செயற்றிட்டங்கள் மூலமாக இவற்றை நிறைவேற்றி வருகின்றன.

பெண் கல்வி தொடர்பாக இன்று சமூகம் உரிமைகளையும் சலுகைகளையும் போதியளவு வழங்கினாலும் இன்னும் பல இடங்களில் பெண்களின் வாழ்க்கையில் முழுமையான சுதந்திரம் இல்லாமலும் உள்ளது. அதிகார அமைப்பில் பெண்கள் பூரணமாக இடம்பெறாதவரை இத்தகைய சட்ட உரிமைகள் சிறிதளவு தான் பயனளிக்குமே தவிர முழுமையான பயனைத்தராது.

எனினும் பெண்களின் மனிதவள மேம்பாட்டில் அவர்களது ஊட்டம், சேம நலம், சுகாதாரம் என்பவற்றுடன் ஒன்றிணைந்த அம்சம் கல்வியும் தொழிற் பயிற்சியுமாகும். ஆனாலும் பெண்களின் கல்வி உள்ளீட்டிற்குப் பெற்றோர் செலவிடும் பணத்திற்குப் பயனாகக் கிட்டும் வருமானத்தைத் தாம்பெற முடியாதென்ற உணர்வுகளும் தொழிற்தகைமைக்கான கல்வி மேம்பாட்டுக்கான பெண்களின் ஆர்வத்தை மட்டுப்படுத்துகின்றன.

பெண் கல்வியின் முக்கியத்துவம்

கல்வியின் பொதுவான நோக்கம் தம்மை அறிதலும் வெளிப்படுத்தலுமாகும். இது பெண்களுக்கும் பொருந்தும் என்பதே காந்தியடிகளின் கருத்தாகும்.

ஒரு பெண் தான் யாரையும் சார்ந்தவளாக யாரின் பகுதியாகவும் உணராமல் தனித்தன்மை உடைய ஒரு மனித உயிராக சமூகத்தில் ஆண்களைப் போன்ற உரிமைகளும் கடமைகளும் திறமைகளும் உடையவளாக விளங்க வேண்டும். ஓர் ஆணுக்குத் தரப்படும் கல்வி எப்படி அவனுடைய தனித்தன்மைகளை வெளிக்கொணர்ந்து சமூக மேம்பாட்டிற்கு வழி வகுப்பதாக அமைகின்றதோ அதேபோல் ஒரு பெண்ணுக்கு வழங்கப்படும் கல்வியும் அப்படியாகவே அமைய வேண்டும். இதன்மூலம் பெண்களின் கல்விக்கான சம சந்தர்ப்பம் அதிகமாகின்றது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் பெண்கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி ஓர் ஆண் கல்வி கற்பதால் அது அவனுக்கு மட்டுமே பயன்படுகின்றது.

ஒரு பெண் கல்வி கற்றால் அது அவளது குடும்பம் முழுவதும் கல்வி கற்றதற்குச் சமம் என்கின்றார். குடும்ப வாழ்க்கையை நலமுறச் செய்வதற்கும் குழந்தைகளது அறிவு வளர்ச்சிக்கும் சிறந்த அடித்தளத்தை அமைக்கவும் எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கும் சமுதாய வளர்ச்சி ஏற்படவும் பெண் கல்வி மிக முக்கியமானதாகக் கருதப்படும்.

பெண்கல்வி இன்று முக்கியத்துவம் உடையதாக விளங்கினாலும் அத்துறையில் சில தடைக்கற்களும் உண்டு. இதனால் பெண்களுக்கும் கல்விக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்காகப் பெண் கல்வியைத் துரிதப்படுத்துவதற்கான பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. பெண்களின் கல்வி மற்றும் தொழில் பற்றிய பாரம்பரியமான மூட நம்பிக்கைகளை உடைக்கும் வகையில் இன்றைய் கல்விச் செயற்பாடுகள் சமத்துவமாக அமைந்துள்ளன.

இத்தகைய சமத்துவ நிலைகள் சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்துகின்றன. எனவே சமுதாயத்தில் ஆண்களுக்கு அளிக்கப்படும் அனைத்துவிதக் கல்வியும் பெண்களுக்கும் அளிக்கப்படுதல் சிறப்பானதாகும். இத்தகைய கல்விகள் மூலம் பெண்கள் தன்னையும் தன் குடும்பத்தையும் சிறந்த முறையில் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய முன்னேற்றத்துக்கும் தூணாக விளங்குகின்றார்கள்.

எனவே இன்று நாட்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளவர்களான பெண்களையும் சமுதாயத்தில் உயர்ந்த ஊதியத்தில் சிறந்த தொழிலில் அமர்த்தும் போது நாட்டின் வருமானமும் அதிகரித்துச் செல்கின்றது. எனவே பெண் மனித வளத்தை வீணடிக்காமல் அதன் உச்சப் பயனை அடைந்து கொள்வதற்காக நன்கு திட்டமிடப்பட்ட கல்விக் கொள்ளைகள் சமத்துவமாக வகுக்கப்படுதல் சிறப்பானதாகும்.

ஆரம்ப கால பெண்களின் வாழ்க்கை முறைகளை எடுத்து நோக்கும் போது வேத காலத்திலும் பழந்தமிழர் காலத்திலும் பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டி வாழ்ந்துள்ளார்கள்.

இந்நிலை ஓரளவு இடைக் காலம் வரை தொடர்ந்து வந்துள்ளது. எனினும் அதற்குப் பின்னுள்ள காலங்களில் பெண்களுக்கான உரிமைகள் என்பது கட்டுப்பாடுகள் என்ற பெயரால் நசுக்கப்பட்டன. அன்றைய சமுதாய மாற்றமும் சூழல்களும் பெண்ணடிமைக்கு வித்திட்டன. பொது உற்பத்திக்கான வேலைகளில் ஆணுக்குப் பெண் சமமாக இருந்து உதவிய நிலை மெல்ல மெல்ல குறைந்து பெண்ணுக்கு வெளி உலகத் தொடர்பு நீக்கப்பட்ட நிலையில் வீட்டுக்குள் முடக்கப்பட்டாள். இது ஆண் வழிச் சமூகத்திற்கு அடிகோலியது.

சமூக உற்பத்தியில் அப்போது பெண் அனுமதிக்கப்படவில்லை. குடும்பத்திற்காக உழைப்பதே அவள் கடமையாகவிருந்தது. கற்பு நெறிக்குச் சமயச் சாயம் பூசிச் சமயத்தின் பெயரால் பெண்ணை அடக்கி வைப்பதற்கும் சமயம் ஒரு வலிமையான ஆயுதமாகப் பயன்பட்டது. இலக்கியங்களும் பெண்களைப் பலவீனவர்களாகவே காட்டுகின்றன.

மனைவி என்பவள் கணவனின் உரிமைப் பொருள் என்று கருதப்பட்டாள். ஆனாலும் அதே நேரத்தில் ஆண் ஆதிக்கச் சமூகத்தின் போக்கினை எதிர்த்து எழுந்த பெண்களின் எதிர்ப்புக் குரலும் இலக்கியங்களில் இடம் பெற்றன.

ஆனால் இன்றைய சமுதாயத்தின் சகல பக்கங்களிலும் பெண்களின் முக்கியத்துவம் எழுத்திலும் பேச்சிலும் ஓங்கி ஒலிப்பதைக் காண முடிகிறது. தேர்தல் நடைமுறைகளின் நாடாளுமன்றங்களில் பெண்களின் குரல் சமத்துவ உணர்வைப் பறைசாற்றுகின்றன.

இன்று ஆணுக்கு இணையாகக் கல்விய றிவு, அரசியல் நிர்வாகம், பாதுகாப்பு, தொழிற்துறை, அறிவியல், போன்ற அனைத்துத் துறையிலும் பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். பெண்களின் நலனைப் பாதுகாக்கும் சட்டங்களையும் வாய்ப்புக்களையும் அறிந்து பெண்கள் செயற்படுகிறார்கள். ஆண்களின் கல்வி, தொழில் நடவடிக்கைகளில் அவர்களுக்கு இருக்கும் மதிப்பு இன்று பெண்களுக்கும் இருக்கின்றது. பெண்கள் தங்களின் ஜனநாயகப் போக்கினை உணர்ந்து பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட்டுச் சாதனை புரிபவர்களாக விளங்குகின்றார்கள்.

(தொடரும்)

கலாநிதி திருமதி. ஜெ. இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு பிரிட்டன் தமிழ் அவை அழைப்பு

பிரித்தானிய தமிழ் அவையின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று பிரித்தானியா சென்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.சிறிதரன், பா.அரியநேத்திரன் ஆகியோர் பிரித்தானியா சென்றுள்ளனர். கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் இந்த மாநாட்டிற்கு செல்லவுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் விசா அனுமதி கிடைக்கவில்லை.

பெரும்பாலும் இன்னும் ஓரிரு தினங்களில் அவர்களும் பிரித்தானியா செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

வட கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டிருக்கும் காணி அபகரிப்புக்கள், சுவீகரிப்பு உள்ளிட்ட ஏனைய காணிசார் பிரச்சினைகள் சம்பந்தமாக சர்வதேச சமூகத்திற்கு ஜெனீவா மாநாட்டை முன்னிட்டு விளக்கும் முகமாக காணி மாநாடொன்றை பிரித்தானிய தமிழ் அவை ஏற்பாடு செய்துள்ளது.

இரு தினங்கள் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள இம்மாநாட்டுக்கு சர்வதேச நாடுகளைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இரு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் யுத்தத்தின் பின்னர் வடகிழக்கில் பல்வேறு வகையில் அபகரிக்கப்பட்ட காணிகள், குடியி ருப்பு நிலங்கள், வயல்கள், தரிசுநிலங்கள், அரச காணிகள் போன் றவை அபகரிப்பு செய்யப்பட்டமை தொடர்பாகவும் சுவீகரிப்பு செய்யப் பட்ட நிலைகள் தொடர்பாகவும் அரசின் அத்துமீறிய செயல்கள் வட கிழக்கைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள் ஆகியோரால் விபரமாக சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்து கூறப்படவுள்ளது. (அ-2)

# பிரபாகரன் சிறந்த ஆலோசகர்; அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறந்த ஆலோசகர் என சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.


ஆலோசனைகள் தொடர்பான செய லகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆலோசனை சேவைகளை ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வந்து பொது கொள்கைளை வகுத்து அதனை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

என்னை பொறுத்தவரையில் பிரபாகரனும் சிறந்த ஆலோசகர். அவர் சிறந்த ஆலோசகர் என்பதன் காரணமாகவே உடலில் வெடி குண்டை கட்டி தாக்குதல் நடத்தும் பயிற்சிகளை கொடுத்து அதனை நிறைவேற்றும் இடத்திற்கு நகர்த்தினார்.

அரசியலுக்கு வருபவர்களுக்கும் இன்று ஆலோசனைகளை வழங்க வேண்டியுள்ளது. அரசியல் கொள்கை, அனுபவம், எதற்கு அரசியலுக்கு வந்தார்கள் என்பது குறித்து புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். நடிகர்கள், நடிகைகளும் அரசியலுக்கு வந்துள்ளனர். அவர்களுக்கும் ஆலோசனை வழங்குவது முக்கியமானது என அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## இரத்தினம் கணேஷ்வரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கணேஷ்வரன் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு Hospital Rene Dubos, Avenue de LIle de France,95300 Pontoise,France என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி ஞானேஸ்வரி சுந்தரம்பிள்ளை

வேலணை மேற்கு தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி சுந்தரம்பிள்ளை கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிக்கு Chapel Ridge Funeral Home ,8911 Woodbine Ave, Markham,ON,L3R 5G1 என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## தாமோதரம்பிள்ளை மருதயனார்

இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை மருதயனார் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை அன் று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு City of London Cemetery & Crematorium ,Alders brook Road, London E12 5DQ ,UK என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## மதியாபரணம் நாகேந்திரன்

வட்டுக்கோட்டையை வாழ்விடமாக கொண்ட மதியா பரணம் நாகேந்திரன் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு Hospital Jean Jaures ,9Sente des Dorees,75019 Paris என் னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## மாரிமுத்து கணேஸ்

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கணேஸ் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.



## துரை சுப்பிரமணியசிவம்

இணுவில் துரை வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட துரை சுப்பிரமணியசிவம் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லத் துரை கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12 மணிக்கு Ekta Centre 366A Stag Lane, Kingsbury-London, NW 9 9AA என்னும் முகவரி யில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் தொடரும் முறைகேடுகள்

## வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

இந்திய வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்படாத கிராம மக்கள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் பயனாளிகள் தெரிவு இடம்பெற்று தற்போது 3ஆம் கட்ட வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டவுள்ள நிலையிலும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய கிராமங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படாது, அமைச்சரொருவரின் சிபாரிசில் வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட பிரஜை கள் குழு ஏற்பாடு செய்திருந்த இப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட கிராம மக்கள், வவுனியா [illegible] சிக் கல்லூரிக்கு முன்பாக ஒன்று கூடி பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"எமக்கு வீட்டுத்திட்டத்தைத்தா", "அமைச்சரே! அதிகாரிகள் உனது கைக்கூலிகளா?", "இந்திய அரசே! வீட்டுத்திட்டத்தை யாருக்கு வழங்கினாய்?", "அமைச்சர் பாரபட்சம் காட்டுகின்றார்", "ஜனாதிபதி செயல [illegible] தே" என்ற வாசகங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பிக் கொண்டு வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்றனர்.

நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள், வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் வீதியோரத்தில் நின்று சில மணி நேரம் கோசம் எழுப்பியதுடன் ஜனாதிபதக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜர் ஒன்றையும் வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

இதன்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி. சிவமோகன், ஜிரிலிங்கநாதன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மனித உரிமைச் செயற்பாட்டாளர் என்.ரஜீவன், வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபையின்உறுப்பி னர்களான க. பரமேஸ்வரன், எஸ்.பார்த்தீபன், பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ். தேவராஜா உட்பட மனித உரிமை செயற்பாட்டாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (அ-250)

## ஸ்ரீ அம்மாபகவான் கூட்டுப்பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மாபகவான் சுவர்ணயுக ஆலயத்தின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் குறிப்பிட்ட பக்தர்களுக்கான வழிபாட்டு நிகழ்வும் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை இடம்பெறும்.

மேற்படி பூசை நிகழ்வுகள் வாராந்தம் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், அபிராமிப்பட்டர் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் விசேட பூஜைகள் இடம்பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையையடுத்து 5.30 மணிக்கு அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திரு வீதியுலா வருதலும் இடம்பெறும். (அ-2)

## இந்துசமய பேரவையின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும். தீர்மானங்களை முன் கூட்டியே எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு செயலாளர் சி. சக்திகிரீவன் கேட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குஜராத் மாநிலத்தில் நடைபெறவுள்ள ராஜ்யசபா தேர்தலுக்காக பா.ஜ. சார்பில் இருவர் முதல்வர் நரேந்திரமோடி முன்னிலையில் தங்களது வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதைப் படத்தில் காணலாம்.

# சுப்பர் நிலவு வானில் நாளை தோன்றும்

விண்வெளியின் அதிசயமான சுப்பர் நிலவை இந்த வாரத்தில் காணலாம் என விண்வெளி ஆராய்ச்சிமையம் தெரிவித்துள்ளது. பூமியைச் சுற்றிவரும் சூரியன், சந் - திரன் ஆகியவை இந்த ஆண்டு ஐந்து முறை ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் வாய்ப்பு வருகின்றது.

அப்போது சந்திரன் சூரியனைவிட பூமியின் அருகில் வருவதால் அதனுடைய பிரகாசம் அதிகமாகவும், அளவு பெரியதாகவும் தெரியும் வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து விண்வெளி மையம் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாண்டில் பூமி, சூரியன் சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் சந்திக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்த நிகழ்வால் வழக்கத்தை காட்டிலும் நிலவின் அளவு பெரிதாக காணப்படும். இத்தகைய நிகழ்ச்சிக்கு சுப்பர் நிலவு என பெயரிட்டு அழைக்கப்படுகிறது. அத்தகைய நிகழ்வு இந்தாண்டு ஐந்து முறை நிகழ்கிறது. இம் மாதம் முதலாம் திகதி முடிந்துள்ளது.

அடுத்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. தொடர்ந்து ஜூலை 12, ஒகஸ்ட் 10,செப்டம்பர் 9 ஆகிய திகதிகளில் நிகழ உள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி முதல் இதனை காணலாம் என விண்வெளி பவுண்டேஷனின் தலைவர் தேவ்கன் தெரிவித்துள்ளார்.

மேலும் மீண்டும் இது போன்று ஒரு நிகழ்வு எதிர் வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரியில் தான் தோன்றும் என தெரிவிக்கப்படுகிறது.

(2)

# தெலுங்கானா மசோதாவை விவாதிக்க அவகாசம் கேட்கும் ஆந்திரா



(ஐதராபாத்)

தெலுங்கானா மசோதா குறித்து ஆந்திர சட்டப் பேரவையில் விவாதிக்க மீண்டும் அவகாசம் கோரியுள்ளதாக முதல்வர் கிரண் குமார் ரெட்டி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் 3 வாரம் அவகாசம் கேட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆந்திர மாநில மறு சீரமைப்பு மசோதா-2013 குறித்து ஆந்திர சட்டப் பேரவையில் விவாதித்து ஜனவரி 23ஆம் திகதிக்குள் அந்த மசோதாவை தனக்கு அனுப்பி வைக்கும்படி குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறியிருந்தார்.

ஆனால் பெரும்பாலான சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது கருத்தை தெரிவிக்க இயலாததால் கிரண் குமார் ரெட்டி கால அவகாசம் கோரியிருந்தார். இதையடுத்து இன்று வரை அவகாசம் அளிக்கப்பட்டது.

இம்மசோதா குறித்து முதல்வர் உட்பட 90 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை சட்டப்பேரவையில் தெரிவித்தனர். மேலும் சிலர் தங்களது கருத்தை எழுதிக் கொடுத்தனர்.

இந்நிலையில் சட்டப் பேரவையில் சீமாந்திரா- தெலுங்கானா உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அனைத்து உறுப்பினர்களாலும் மசோதா குறித்து பேச முடியவில்லை.

இது குறித்து, கிரண்குமார் ரெட்டி கூறுகையில், மசோதா குறித்து விவாதிக்க மேலும் அவகாசம். கேட்டு குடியரசுத்தலைவருக்கு கடிதம் அனுப்பி உள்ளேன் என்று தெரிவித்தார். எனினும், அவர் எத்தனை நாள் அவகாசம் கேட்டார் என்பது குறித்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

பேரவையில் அமளி: கிரண்குமார் ரெட்டி கடந்த சனிக்கிழமை பேரவைத் தலைவரிடம், இந்த மசோதாவை மத்திய அரசுக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற நோட்டீஸ் கொடுத்திருந்தார்.

நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக ஆந்திர சட்டப் பேரவையில் அமளி ஏற்பட்டது. முதல்வரின் நோட்டீஸ்' க்கு எதிர்ப்பு தெரிவித்து தெலுங்கானா எம்எல்ஏக்கள் சபாநாயகரின் இருக்கையை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பினார்கள்.

சீமாந்திரா பகுதி எம்எல்ஏக்கள் முதல்வரின் நோட்டீஸ் குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்று பதிலுக்கு கோஷம் எழுப்பினார்கள். இதனால் பேரவைத் தலைவர் பேரவையை 2 முறை ஒத்திவைத்தார். (2)

# டேங்கர் லொறி- பேருந்து மோதி விபத்து; 7 பேர் பலி

மராட்டிய மாநிலம் மனோர் என்ற இடத்தில் டீசல் டேங்கர லொறி மீது சொகுசு பேருந்து மோதி பேருந்து தீப்பிடித்து எரிந்ததில் 7 பேர் பலியாகியுள்ளனர்.

மராட்டிய மாநிலம் தானேவில் இருந்து அகமதாபாத்திற்கு நேற்று முன்தினம் இரவு சொகுசு பேருந்து ஒன்று புறப்பட்டது. இந்த பேருந்தில் 20க்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். இந்த பேருந்து அதிகாலை ஒரு மணியளவில் மனோர் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த போது டேங்கர லொறி மீது மோதியது. மோதியதை அடுத்து பேருந்து தீ பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம்செய்த 7பேர்சம்பவ இடத்திலே பலியானாரகள். 14 பேர் காயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் அப்பகுதியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். (2)

பாரதச் செய்தி

# மாசடைந்த நகரங்களில் உலகில் டில்லி முதலிடம்

உலகிலேயே மாசடைந்த நகரங்களின் பட்டியலில் டில்லி முதலிடம் வகிக்கிறது.

அமெரிக்காவின் யெல் பல்கலைக்கழகம் 2014ஆம் ஆண்டிற்கான சர்வதேச சுற்றுச்சூழலுக்கான புள்ளிவிபரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் இந்தியா 32 புள்ளிகள் சரிந்து 155ஆவது இடத்தில் உள்ளது. மேலும் உலகிலேயே மாசடைந்த நகரங்களின் பட்டியலில் டில்லி முதலிடத்தில் உள்ளது.

நாசா செயற்கைக்கோள் ஆய்வின் படி சுற்றுச்சூழல் மாசுப்பாட்டில் டில்லிக்கு அடுத்தபடியாக சீனாவின் யென் சிங் நகரம் உள்ளது.

டில்லியில் ஓடும் அதிகமான வாகனங்கள் சுற்றுச் சூழல் மாசுபாட்டுக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவார்ட் ஆய்வின படி டில்லியில் உள்ள 5 பேரில் ஒருவர் சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஏழுமலையானை தரிசிக்கும் மேர்வின்

(திருப்பதி)

திருமலை ஏழுமலையானை தர்சிக்க, இலங்கை, மக்கள் தொடர்பு மற்றும் பொது விவகாரத்துறை அமைச்சர், மேர்வின் சில்வா நேற்று முன்தினம் மாலை இந்தியா சென்றுள்ளார்.

கடந்த முறை, திருமலைக்கு வருகைதந்த, இலங்கை ஜனாதிபதிப்பு கறுப்பு கொடி காட்ட தமிழகத்திலிருந்து பலர் திருப்பதிக்கு வந்தனர். அதனால் அமைச்சருக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திலிருந்து, 2 எஸ்கார்ட் வாகனங்களும் திருப்பதியிலிருந்து ஒரு வாகனம் என 3 வாகனங்கள் அமைச்சரின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது.

செய்தியாளர்கள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும், ஏதும் சொல்ல விரும்பவில்லை என்ற பதிலையே அவர் கூறினார்.

திருமலையில் தங்கும் அவர், சுப்ரபாத சேவையில் ஏழுமலையானை தரிசிக்க உள்ளார். (2)

# நெடுமாறன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்



(சென்னை)

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங் [illegible] கொடுக்கும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுபபதற்காகத் தமிழின உணர்வாளர்களை ஒன்று திரட்டிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கெடுக்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமை கள் சபையில், இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசு செயற்பட வேண்டும்.

அதற்கு இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

எவ்வாறான வகையில் அநத அழுத்தங்களைக் கொடுப்பது, தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது என் பவை தொடர்பில் ஆராயவதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக நெடுமாறன் மேலும் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம், செயல், பேச்சு இந்த மூன்றிலும் சத்தியத்தை பின்பற்றுபவனே எல்லாம் அறிந்த ஞானி.

~ காந்திஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அன்றைய புதையலும் இன்றைய புதையலும்

புண்ணியம் செய்பவர் யார்? இப்படி ஒரு கேள்வி பாரதியின் மனதில் எழுகின்றது. இந்த வினாவிற்கு புண்ணியம் என்றால் என்ன? என்ற விளக்கம் தேவைப்படும்.

புண்ணியம் எது என்ற கேள்வியை தனக்குள் எழுப்பிய பாரதி அதற்குத் தானே பதிலையும் தருகின்றான்.

“...பக்கத்தில் இருப்பவர் துன்பந்தனைப் பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி...” என்று பாரதியின் விளக்கம் விரிகிறது.

நம் அயலவர் துன்பப்படுகின்றபோது அது கண்டு நாம் இரக்கம் கொள்ளாவிடில் மனித வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடும்.

எனவேதான் பக்கத்திருப்பவர் துன்பந்தனைப் பார்க்கப் பொறாதவர் புண்ணியமூர்த்தி என்று பாரதி முடிவு கட்டினான்.

பாரதியின் இந்த முடிவைத்தான் நம் தமிழ் மன்னர்கள் தங்கள் ஆட்சியில் செய்தனர். முல்லைக்கொடி கொழுகொம்பின்றி வீழ்ந்து கிடக்கும் துன்பத்தைக் கண்டு தாங்க முடியாத பாரி மன்னன் தன்தேரை முல்லைக்குத் தானமாகக் கொடுத்தான்.

புறா மீது இரக்கம் கொண்ட சிபிச் சக்கரவர்த்தி தன்னையே அர்ப்பணிக்கத் தலைப்பட்டான்.

கன்றிழுந்த தாய்ப்பசுவின் கதறல் தாங்க முடியாமல் மனுநீதிச் சோழன் தானே தேர் செலுத்தித் தன் மைந்தன் உடலில் ஏற்றினான். இப்படியாகத் தமிழ் மன்னர்களிடம் இருந்த புண்ணிய கருமத்தை இப்போது வெறும் கதையாகப் படிக்கலாமேயன்றி அந்த மனுநீதியை உலகில் எங்கும் காணமுடியாது.

அதிலும் குறிப்பாக இலங்கைத் தீவில் புண்ணியம் என்றால் என்ன? என்று கேட்டும் அளவில் நிலைமை மாறிவிட்டது.

இனவாதம் என்ற பேய் எங்கள் நாட்டில் நிரந்தரமாகக் குடியிருப்பதாயிற்று. பலருடைய சீவியத்திற்கு இனவாதப் பேச்சே தீனிபோடுவதாக இருப்பதால், இனவாதம் தீரா நோய் என்பது தெளிவு.

மற்றவர்களுடைய கண்ணீர், என் சீவியத்தின் மூலதனம் என்பதாக நிலைமை மாறிவிட்டபின்னர் இந்த நாட்டில் நல்லது நடக்கும் என்று யாரேனும் எதிர்பார்த்தால் அது மகா மடைத்தனம்.

முன்பெல்லாம் இந்த நாட்டை ஆண்ட மன்னர்களிடம் (எந்த இனம் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம்.) மக்களின் எதிர்கால வாழ்க்கை பற்றிய தூரநோக்கு இருந்தது. அதன் காரணமாகவே குளங்கள் அமைக்கப்பட்டன.

அன்று கட்டப்பட்ட குளத்தின்நீர் இன்று உனக்கா? எனக்கா என்று? வாதிடுவதே இன்றைய நிலைமையாக இருக்கின்றது.

பரவாயில்லை. காலமாற்றங்கள் மக்களுடைய உடை நடை பாவனைகளை மாற்றும்போது மக்களின் குணவியல்புகளும் மாற்றமடையும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

இதை நாம் கூறும்போது, இதெல்லாம் ஆதாரமற்ற கதை என்ற யாரேனும் கூறலாம். அவ்வாறு கூறுபவர்களுக்கு நாம் சொல்லக் கூடியது,

அந்தக் காலத்துப் புதைகுழிகளை தோண்டும் போது தங்க நாணயங்கள், செப்பு நாணயங்கள், சூலாயுதங்கள் என்பன வெளிப்படும்.

இந்தக் காலத்துப் புதைகுழிகளை தோண்டும் போது மனித மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள் என்பன வெளிவருகின்றன.

பார்த்தீர்களா? அன்றைய ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை.

## 45 ஆயிரம் பேர் போதைப்பொருள் பாவனை

இலங்கையில் சுமார் 45 ஆயிரம் பேர் ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்துவதாக ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் 16 வீதமானவர்கள் 15 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

இவர்களில் 9 வீதமானவர்கள் ஹெரோயின் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## இலங்கையிடம் இராணுவப் பயிற்சி வழங்கக் கோருகிறது உகண்டா

இலங்கையின் இராணுவ பயிற்சியை தமது நாடு எதிர்ப்பார்ப்பதாக உகண்டாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர் நேற்று முன்தினம் இலங்கையின் இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரட்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போதே உகண்டாவின் பாதுகாப்பு அமைச்சர் தமது கோரிக்கையை விடுத்துள்ளார்.

உகண்டாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒடொன்கோ ஜெலீ உட்பட்ட குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகள், எதிரிகள் மீதான தாக்குதல்கள் மற்றும் சினைப்பர் தாக்குதல் போன்ற விடயங்களிலேயே தமது நாடு இலங்கையிடம் இருந்து பயிற்சிகளை எதிர்பார்ப்பதாக உகண்டாவின் பாதுகாப்பு அமைச்சர் இச்சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (அ-2)

## பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட பாரவூர்திகள் சங்கம் அமைப்பது தொடர்பாக அனைத்து பாரவூர்தி உரிமையாளர்களுக்குமான ஒன்றுகூடல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் சிவநகர் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

# எழுத்தாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுடைய நூல்களை வெளியிட்டு உதவ திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ். மாவட்ட எழுத்தாளர்களுடைய சிறு கதைத் தொகுதி ஒன்று வெளியிடப் படவுள்ளது.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட தொகுதிகளில் இடம்பெற்ற சிறுகதைகள் கூடுமானவரை தவிர்க்கப்படும். இது வரை நூலுருப் பெறாத சிறுகதைகளுக்குத் தெரிவில் முன்னுரிமை அளிக்கப் படும்.

தொகுதிக்கான சிறுகதைகளை திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் நியமிக்கும் தேர்வுக்குழு தெரிந்தெடுக்கும்.

நூல்களை அச்சிட்டும், வெளியிட இயலாத சூழ்நிலையிலுள்ள எழுத்தாளர்களுடைய நூல்களை வெளியிட திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் ஆதரவு வழங்கும்.

இவ் ஊக்குவிப்புத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் இணைப்பாளர், திசைகாட்டி கலை இலக்கிய மன்றம், 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம் என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் அல்லது 0212219016 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். (அ-2)

# முள்ளிவாய்க்காலில் நினைவு தூபி அமைக்க முடியாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவுத் தூபிகளை அமைக்கும் யோசனைக்கு அரசாங்கம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

வடக்கின் முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவுத தூபிகள் அமைக்கப்பட வேண்டுமென வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தவர்களுக்காக இவ்வாறு நினைவுத் தூபி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினையாகும்.

எனவே நினைவுத் தூபி அமைக்க அனுமதிக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சுத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

நினைவுத் தூபி அமைக்கும் யோசனையின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புலி ஆதரவாளர்கள் செயற்பட்டு வருகின்றனர் என புலனாய்வுப் பிரிவினர் தெரிவிதுள்ளனர்.


முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த புலி உறுப்பினர்களுக்காக தமிழகத்தின் தஞ்சாவூரில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சத்திய தரிசனம்



சிலர் தங்கள் உத்தியோகத்தை குறித்து வீண் பெருமை கொள்கின்றனர். அகங்காரம் என்பது மனித வாழ்க்கையின் வேரையே அழிக்கும் வேர்ப்புழு. இராகம் என்கிற பற்றுதல், துவேசம் என்கிற வெறுப்பு இவை இரண்டும் அகங்காரத்தை வளர்க்கின்றன.

இவை மூன்றும் சேர்ந்து மனித வாழ்வுக்கு அழிவைக் கொடுக்கின்றன. தெய்வீக அன்பினால் மனித மனம் நிறையும் போதுதான் மனித வாழ்க்கை மிகுந்த ஒளியுடன் பிரகாசிக்கும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## திருக்கோயிலிற் செய்யக்கூடாதவை

- பிரதான வாசல் வழியேதான் கோயிலுக்குள் செல்லவேண்டும்.
- குறிப்பிட்ட காலம் தவிர பிற நேரங்களில் கோயிலுக்குள் செல்லுதல், அங்கு சென்று படுத்திருத்தல் கூடாது.
- அங்குள்ள தூண்கள், சிலைகள் ஆகியவற்றின்மீது ஏறி அமரக்கூடாது.
- கோயில் மூடியிருக்கும் போது வெளியே நின்று வழிபடக்கூடாது.
- தேங்காய், பூ, சூடம், பழம் போன்ற எவ்விதப் பொருளும் எடுத்துச் செல்லாமல் வெறுங்கையுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.
- கைலி உடுத்திக்கொண்டு கோயிலுக்குச் செல்லக்கூடாது.
- அர்ச்சனைப் பொருட்களை இடது கையால் தூக்கிச் செல்லக்கூடாது.
- அர்ச்சனைப் பொருட்களை இடுப்பிற்குக் கீழே தொங்கவிட்டுச் செல்லக்கூடாது.
- ஒரு ஆடையுடன் மட்டும் அல்லது ஈர ஆடையுடன் உள்ளே செல்லக்கூடாது.
- விளக்கு எரியாத இடத்தில் வழிபடக்கூடாது.
- கோயிலில் அணைந்த விளக்கினை ஏற்றலாம். எரிந்து கொண்டிருக்கும் விளக்கை அணைக்கக்கூடாது.
- கோயிலில் விளக்கு அணையும் நிலையில் இருந்தால் திரியைச் சரிசெய்து விளக்கை எரிய விடவேண்டும். அப்படிச் செய்யும்பொழுது கையில் விளக்கில் உள்ள எண்ணெய் படும். அதைத் தலையில் தடவக்கூடாது.
- கோயிலில் தலைவாசல் வாசற்படியில் உட்காரக்கூடாது.
- கோயில் தலைவாசற் படியிற் சூடம் ஏற்றக்கூடாது.
- புலால் உண்ட அன்று கோயிலுக்குச் செல்லக்கூடாது.
- தலைமுடியைக்கோதுதல், கூந்தலை அவிழ்த்து விடுதல், மூக்குச் சிந்துதல், எச்சில் துப்புதல், வெற்றிலை, பாக்கு போடுதல், கால்கள் நீட்டி உட்காருதல், படுத்தல், உறங்குதல், சூதாடுதல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது.
- எக்காரணம் கொண்டும் கோயிலுக்குரிய பொருளை நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது.
- கோயில் சென்று வீட்டிற்கு வந்து சிறிதுநேரம் கழித்து கை, கால் கழுவவேண்டும். ஆனால் குளிக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டான்லிக் கல்லூரியை வீழ்த்தி மகாஜனா கல்லூரி அபார வெற்றி



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு அணிகளிற்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரிக்கும் ஸ்டான்லிக் கல்லூரிக்குமிடையிலான போட்டியொன்று அண்மையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயற்சுழற்சியில் வென்ற ஸ்டான்லிக் கல்லூரி முதலில் களத்த டுப்பாட்டத்தை தெரிவு செய்தனர். இதன்படி முதலில் துடுப்பாடிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் 90, ஜனந்தன் 37, டிலோஷன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்டான்லிக் கல்லூரி சார்பாக சுரேஷ் 5, உதயா 3, விதுன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்சில் துடுப்பாடிய ஸ்டான்லிக் கல்லூரி 66 ஓட்டங்களிற்குள் சுருண்டது. இதில் உதயா தனித்து நின்று போராடி அணிக்காக 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக ஜனந்தன் 6, மயூரன் 2 விக்கெட்டுக்களையும் கஜந்தன் மற்றும் ரிஷோத் தலா 1 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

203 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த ஸ்டான்லிக் கல்லூரி பலோன் முறையில் தனது 2ஆம் இனிங்சில் துடுப்பாடியது. கடுமையாக போராடிய போதும் ஸ்டான்லிக் கல்லூரி அணியினரால் 146 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதில் உதயா 30, சுரேஷ் 17, கலைச்செல்வன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக கஜந்தன் 3, ஜனந்தன் மற்றும் மயூரன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் ஒரு இனிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்களால் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றது.

(க-23)

# துடுப்பாட்டம், சதுரங்கப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம் சன சமூக நிலையம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் துடுப்பாட்டம், சதுரங்கச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

*துடுப்பாட்டம் நிபந்தனை*

¤ 7பேர் பங்கு பற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டம் குறைந்தது 5 பேர் பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ள வேண்டும். (ஒருவர் மாத்திரம் இரு பந்து பரிமாற்றம் மேற்கொள்ள முடியும்)

¤ விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வீரர்கள் மாத்திரமே போட்டியில் பங்கு பற்ற முடியும்

¤ விண்ணப்பக் கட்டணம் 500 ரூபாய்

¤ விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் கழகங்கள் போட்டி அமைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

*சதுரங்க போட்டி*

¤ 21வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கானது

¤ விண்ணப்ப முடிவுத்திகதி பெப்ரவரி 15

¤ நூலக கலாசார மண்டபத்தில் போட்டி இடம்பெறும்

¤ சதுரங்கப் போட்டியானது பெப்ரவரி 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

¤ விண்ணப்ப கட்டணம் 150 ரூபாய் ஆகும். போட்டியாளர்கள் சதுரங்கப் பலகையுடன் வரவேண்டும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(கரணவாய்)

யாழ்.கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜயலட்சுமி சுகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார். (க-60)

¤ ¤ ¤ ¤ ¤

(யாழ்ப்பாணம்)

யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருத்துவபீட மாணவியும் பாடசாலையின் பழைய மாணவியுமான ஷம்பிகா இராசரத்தினம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் இ.இராசசேகரம், ஓய்வு நிலை விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவஷீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

¤ ¤ ¤ ¤ ¤

(மானிப்பாய்)

யாழ்.ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலய அதிபர் வே.சிவசக்திவேல் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் து. இராமச்சந்திரன், கௌரவ விருந்தினராக உடற்கல்வி ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் வ.முருகேசுவும் கலந்து கொள்வார்கள். (க-23)

# மின்னொளியிலான தாச்சி; ஆலடி சிந்து வெற்றி

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் சுன்னாகம் காந்தரூபன் அணியும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி 13:1 என்னும் பழங்கள் அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியும் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (க-23)

# பந்துவீச்சாளர்களின் செயற்பாடு திருப்தியாக இல்லை - டோனி



தென் ஆபிரிக்காவை தொடர்ந்து நியூசிலாந்துக்கு எதிரான தொடரையும் இந்தியா இழந்து விட்டது. நியூசிலாந்து சென்றுள்ள டோனி தலைமையிலான இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகளில் தோல்வி அடைந்து தொடரை இழந்துள்ளது.

முதலாவது ஆட்டத்தில் 24 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 3ஆவது போட்டி டிராவிலும், 4 ஆவது போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்திலும் நியூசிலாந்து வெற்றிபெற்றது.

தோல்வி குறித்து இந்திய கப்டன் தோனி கூறுகையில்,

இந்திய வேகப் பந்து வீச்சாளர்களின் செயற்பாடு சரியாக அமையாததே தோல்விக்கு முக்கிய காரணம். பவுலர்கள் சிறப்பாக செயற்படாத போது பீல்டர்களை குறை சொல்ல முடியாது. ஆனால் சுழற்பந்து வீச்சாளர்கள் சரியான இடத்தில் பந்துவீசி தங்களின் பங்களிப்பை கொடுத்தனர். பட்டிங்கை பொறுத்த வரையில் கடந்த போட்டியில் கிடைத்த ஆரம்பம் கூட இம்முறை கிடைக்கவில்லை. இது மிடில் ஆர்டர் வீரர்களுக்கு நெருக்கடியை அதிகரித்துள்ளது. இதன்விளைவாக இறுதியில் 15-20 ரன்கள் குறைவாக கிடைத்தது. இத் தொடரில் பட்ஸ்மன்கள் செயற்படுவது முழுவதுமாக திருப்தி அளிக்கவில்லை. சிறப்பாக ஆரம்பிக்கும் எந்த வீரரும் இறுதிவரை நிலைத்து விளையாடவில்லை என்றார். (க)

# நியூஸ்ரார் வெற்றிக் கிண்ணம்; K.C.C.C. அரையிறுதிக்கு தகுதி



பிரதீஸன்.சாம்பவனின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் ஜொனியன்ஸ் அணி சரணடைய அரையிறுதி போட்டிக்குள் நுழைந்தது KCCC.

நியூஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான 20-20 போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்திலே ஜொனியன்ஸ் அணியை 69 ஓட்டங்களினால் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது KCCC.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய KCCC அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியன் 30, ஜனுதாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு 155 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய ஜொனியன்ஸ் அணி 85 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழந்து போட்டியில் தோல்வியத் தழுவியது.

பந்துவீச்சில் KCCC சார்பில் பிரதீஸன் 4, சாம்பவன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இப் போட்டியில் KCCC 69 ஓட்டங்களினால் வெற்றிபெற்று நியூஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான அரையிறுதிக்கு தகுதிபெற்றது. (க-23)

# சென்ரலைட்ஸ் வி.க. வெற்றி



யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் இருபது - 20 சுற்றுப்போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்துடன் இணைந்து நியூஸ்ரார் பிறீமியர் லீக் இருபது - 20 போட்டியை நடத்தி வருகின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இப்போட்டியில் யாழ்.பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியும் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதி கொண்டன.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் நோபேட் 32, அஜித் 18, அலிஸ்ரன் 11 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக சௌமிதரன் 02 (05), கோகுலன் 02 (11), பிரியகாந் 2 (23), சாள்ஸ் 2 (25) இலக்குகளைக் கைப்பற்றினர்.

113 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்ரலைட்ஸ் துடுப்பாட்ட அணி 14 பந்துபரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் 34, ஸ்டீபன் 23, செல்ரன் 12 பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக லிவிங்டன் 4 (15) இலக்குகளைக் கைப்பற்றினார். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹேல இரட்டைச்சதம்

# வெற்றியை நோக்கி இலங்கை





பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ற் தொடரின் முதலாவது போட்டியின் மூன்றாம் நாள் முடிவில் இலங்கை அணி இனிங்ஸ் வெற்றியொன்றை நோக்கிப் பயணித்துள்ளது.

5 விக்கெட்டுக்களை இழந்து 375 ஓட்டங்களுடன் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 730 ஓட்டங்களுடன் தனது இனிங்ஸை இடை நிறுத்தியது. 6-வது விக்கெட்டுக்காக மஹேல ஜெயவர்தன, அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் 179 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு 7வது விக்கெட்டுக்காக மஹேல ஜெயவர்தன, கித்துருவன் விதானகே இருவரும் 175 பந்துகளில் பிரிக்கப்படாத 176 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தனது 7ஆவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்த மஹேல ஜெயவர்தன ஆட்டமிழக்காமல் 203 ஓட்டங்களையும் கௌஷால் சில்வா 139 ஓட்டங்களையும் தனது கன்னிச்சதத்தைப் பூர்த்தி செய்த கித்துருவன் விதானகே ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 86 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 75 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 53 ஓட்டங்களையும் டினேஷ் சந்திமால் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஷகிப் அல் ஹசன் 3 விக்கெட்டுக்களையும் சொஹக் கஸி 2 விக்கெட்டுக்களையும் அல் அமின் ஹொசைன் ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர். 498 ஓட்டங்களால் பின்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய நாள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பங்களாதேஷ் அணியின் அதிரடி வீரர் தமிம் இக்பாலின் விக்கெட்டை ராங்கன ஹேரத் கைப்பற்றினார்.

ஷேரே பங்களா மைதானத்தில் இடம் பெறும் இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த பங்களாதேஷ் அணி 232 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. இதன்படி, 9 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு பங்களாதேஷ் அணிக்கு இன்னமும் 463 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன போட்டிகள் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (கு)



## மெஸ்சி விற்பனைக்கல்ல




உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான லியோனல் மெஸ்சி விற்பனைக்கு அல்ல என பார்சிலோனா அணியின் தலைவர் ஜோசப் மரியா பர்டோமவ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004-ம் ஆண்டு முதல் பார்சிலோனா கிளப் அணியில் இணைந்து விளையாடி வரும் மெஸ்சி, இதுவரையிலும் 331 கோல்கள் அடித்துள்ளார்.

இவர் சமீபத்தில் இந்த அணிக்காக 400-வது போட்டியில் பங்கேற்றார்.

இந் நிலையில் பிரான்ஸைச் சேர்ந்த பாரிஸ் செயின்ட் - ஜெர்மெய்ன் கிளப் அணி ஒப்பந்தம் செய்யமுயற்சி செய்துள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பார்சிலோனா தலைவர் ஜோசப் மரியா பர்டோமவ் கூறுகையில், பார்சிலோனா அணிக்காக இந்த சீசன் மட்டும் 36 கோல்களை அடித்துள்ளார், அவர் ஆடிய 20 ஆட்டங்களில் 16-இல் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

எனவே புதிய ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது. அதனால், அவர் விற்பனைக்கு அல்ல என்று தெரிவித்துள்ளார். (கு)

## ஐ.பி.எல்லில் சங்கா இல்லை




இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இவ்வாண்டுக்கான தொடரில் இலங்கையின் குமார் சங்கக்கார பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று அறிவிக்கப்பட்டுள்ள ஏலத்தில் பங்குபற்றவுள்ளவர்களுக்கான பட்டியலிலேயே குமார் சங்கக்கார இடம்பெற்றிருக்கவில்லை.

உள்ளூர் இந்திய வீரர்களும், சர்வதேச வீரர்களுமாக மொத்தமாக 233 வீரர்கள் இந்த ஏலப்பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் இலங்கையின் குமார் சங்கக்கார தவிர, இலங்கையின் டினேஷ் சந்திமால், அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க், மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் கேமர் றோச் ஆகியோரும இடம்பெற்றிருக்க வில்லை.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நடுப்பகுதியில் இலங்கை அணி இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அத்தொடரைக் கருத்திற்கொண்டே குமார் சங்கக்காரவும், டினேஷ் சந்திமாலும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றாமல் தவிர்த்துள்ளனர் எனக் கருதப்படுகிறது. எனினும் இலங்கையின் முன்னணி வீரர்களில் அஞ்சலோ மத்தியூஸ், மஹேல ஜெயவர்த்தன இருவரும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றவுள்ளனர். (கு)

## இங்கிலாந்தை வென்றது ஆஸி



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது.

ஹோபார்ட்டில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 213 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத்திலிருந்தே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவுஸ்திரேலிய அணி, முதலாவது விக்கெட்டுக்காக 10.4 ஓவர்களில் 106 ஓட்டங்களைக் குவித்திருந்தது. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவ்வணி 213 ஓட்டங்கள் என்ற சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக கமரன் வைட் 43 பந்துகளில் 75 ஓட்டங்களையும் ஆரொன் ஃபின்ச் 31 பந்துகளில் 52 ஓட்டங்களையும் அறிமுக வீரர் கிறிஸ்லின் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் கிளென் மக்ஸ்வெல் 13 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட், ரவி போப்பாரா, ஜேட் டேர்ண்பக், லூக் றைட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 214 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்திலிருந்து வேகமாக ஆட முனைந்த இங்கிலாந்து அணி 13 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்தது. இரண்டாவது விக்கெட்டுக்காக 3 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் குவித்த போதிலும் அதன் பின்னர் விக்கெட்டுக்களை இழந்தது.




4 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களுடன் காணப்பட்ட அவ்வணி சார்பாக 5ஆவது விக்கெட்டுக்காக 47 ஓட்டங்களும் 7ஆவது விக்கெட்டுக்காக மற்றொரு 47 ஓட்டங்களும் பெறப்பட்ட போதிலும் அதன் பின்னர் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தன.

இறுதியில் ரவி போப்பாரா அதிரடியாக ஆடிய போதிலும் அவ்வணியால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ரவி போப்பாரா 27 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும் ஜோறூட் 24 பந்துகளில் 32 ஓட்டங்களையும் அலெக்ஸ் ஹேல்ஸ் 12 பந்துகளில் 22 ஓட்டங்களையும் ஜொஸ் பட்லர் 14 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்ரேலிய அணி சார்பாக நேதன் கோர்ட்டர்நைல் 4 விக்கெட்டுக்களையும் மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 2 விக்கெட்டுக்களையும் கிளென் மக்ஸ்வெல, அறிமுக வீரர் ஜேம்ஸ முவ்றிஹெட் மூவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலிய அணியின் கமரன் வைட் தெரிவானார். (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கூற...

என்னால் எவ்வித கருத்துக்களையும் கூறமுடியாது. ஆனால் இது தொடர்பில் டோக்கியோவில் கலந்துரையாடல் நடைபெறும்.

அமெரிக்க பிரேரணையின் உள்ளடக்கத்தை பார்த்த பின்னரே இது தொடர்பில் ஜப்பானின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஜப்பானிய அரசாங்கத்தினால் இலங்கையின் வட பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைக்கான நிதி ஒதுக்கீடு வழங்குதல் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் ஜப்பானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஊடகவியலாளர் ஜெனீவா மாநாடு தொடர்பில் ஜப்பானின் நிலைப்பாடு தொடர்பாக கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-11)

# நம்பகமான விசா...

குறிப்பிட்டுள்ளார். சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நம்பகமானதும், நியாயமானதுமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு உள்ளிட்ட தற்போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்கள் சர்வதேசதர நிர்ணயங்களை எட்டவில்லை.

2013-ம் ஆண்டு செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநதம்பிள்ளை, ஜெனீவாவில் நடைபெற்ற அமர்வுகளின் போது ஆற்றிய உரையில் இலங்கை நிலைமைகள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த இலங்கை அரசாங்கம் மெய்யான அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

நம்பகமானதும் வெளிப்படையானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகள் மார்ச் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படாவிட்டால் சர்வதேச விசாரணை நடத்த வேண்டுமென வலியுறுத்த வேண்டிய நிரப்பந்தம் ஏற்படும் என கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தார் என ஹியூகோ ஸ்வயார் தெரிவித்துள்ளார். (எ-11)


**பாவித்த லப்டொப்கள் தேவை**

நல்லநிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் தேவை. அழையுங்கள்

0779086737 GUNAA BEST PC

52,Hospital Road, Jaffna.



**NEC**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.

**A/L 2016**

கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம்

01-02-2014 சனி காலை 9.00மணி

A/L 2014,2015, Day Class வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.



**மின் உபகரணங்கள் திருத்துதல்**

Washing Machine, Fridge, TV மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங் திருத்த வேலைகளும் Bath room, Commode, Hot water Shower திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும். (5458)

தொடர்புகளுக்கு:- 0778000748


# பஸ்மீது கல் வீச்சு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த பயணிகள் பஸ் மீது சிலாபத்தில் வைத்து கல்லெறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

எனினும் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. இது குறித்து சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (எ)

# ஜெனீவா...

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மாகாணசபையில் அனந்தி சசிதரன் யோசனைத் திட்டமொன்றை முன்வைத்திருந்தார்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கவும் காணாமல் போனவர்கள் தொடர்பில் கேள்வி எழுப்பவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனீவா விஜயம் செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் ஜெனீவாவிற்கு விஜயம் செய்வது குறித்து கவனமாக சிந்தித்து தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# அமெரிக்க தீர்மானம்...

மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள பீரிஸ் டில்லியில் சல்மான் குர்ஷித்தை சந்தித்து பேசினார்.

இதனை வெளியுறவுத் துறை அமைச்சகமும் உறுதிப்படுத்தியுள்ளது. அரை மணி நேரம் நடநத இந்த சந்திப்பின் போது ஐ.நா. மனித உரிமை ஆணைய விவகாரம் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருநாட்டு மீனவர்களிடையே சென்னையில்நடைபெற்றபேச்சுவாரத்தையின் தொடர்ச்சியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தியிருக்கலாம் என்று தெரிகிறது.

டில்லியில் பல்வேறு நாட்டு தூதரக அதிகாரிகளையும் அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வர உள்ள தீர்மானத்தை கைவிடக் கோரி ஜனாதிபதி ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க வாஷிங்டனில் முகாமிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்க்க ஐ.நா. உறுப்பு நாடுகளை ஆதரவு திரட்ட பிரதிநிதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாக வீரத்துங்க கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பிரபாகரனை...

வர்களை நினைவுகூர முள்ளிவாய்க்காலில் நினைவுத்துபி அமைக்கப்பட வேண்டுமென்றும் வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர இதனைத் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூருவதற்காக இந் நினைவுத் தூபி அமைகக்கப்படவில்லை எனவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

# புலிகள் - தமிழ்க்...

சபையின் உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உளளது

2001-ம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தல்களின் போது புலிகளின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றியீட்டியதாக ஐரோப்பிய கண்காணிப்பு குழு தெரிவித்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2005-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது புலிகளின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களை தேர்தலை புறக்கணிக்குமாறு கோரியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பங்கேற்றமைக்கான புகைப்பட வீடியோ ஆதாரங்கள்காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2001, 2004-ம் ஆண்டு தேர்தல்களின்போது புலிகளுடன்இணைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு செயற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# புலிகளின்...

குண்டுத் தாக்குதல்களை நடத்தும் குழுவொன்றையும் இவர் செயற்படுத்தி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இவரைக் கைது செய்வதற்காக இன்டர்போல் பொலிஸாரின் உதவி நாடப்பட்ட நிலையில், அண்மையில் இவர் கைதானார்.

இதனையடுத்து இவரை அந்நாட்டிலிருந்து நாடு கடத்துவதற்கான அனுமதி கடந்த 17-ம் திகதி பிரான்ஸ் நீதிமன்றத்தில் அந்நாட்டு பொலிஸாரால் கோரப்பட்டது.

இந்த அனுமதி கிடைக்கும் வரையில், அவர் பிரான்ஸ் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-11)

# நேற்றும்...

புக் கூடுகள் உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதுவரை மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று புதன்கிழமை குறித்த மனித புதைகுழி தோண்டப்பட்ட போது அனுராதபுர சட்ட வை[illegible] நிபுணர் டி.எல்.வைத்திய ரெட்[illegible] தலைமையிலான குழுவினர் குறித்த இடத்திற்கு சமுகமளிக்க வில்லை.

இதனால் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படவில்லை.

இதேவேளை திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி உள்ள இடத்திற்கு வருகை தந்த குற்ற புலனாய்வுப் பிரிவினர் 5 வது நாளாகவும் நேற்று புதன்கிழமை தமது விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீண்டும் இன்று வியாழக் கிழமை நீதவான் முன்னிலையில் குறித்த பணிகள் 18 ஆவது தடவையாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அரச அதிபர் - கட்டளை...

பட்டவர்களினாலும்வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள உதய பெரேராவுக்கும் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திற்குமிடையில் அடுத்த மாதம் முதல் வாரத்தில்பலாலி இராணுவ முகாமில்விசேடசந்திப்புஇடம்பெறவுள்ளது.

இதனை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உறுதிபடுத்திய தோடு இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம் பெறவுள்ளதோடு இந்த அமர்விலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால் கடுமையான பிரேரணை முன்வைக்கபபடவுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பல மாற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன.

வீதியோரங்களிலிருந்த இராணுவக் காவரண்கள் மற்றும் மினி படைமுகாம்கள் உள்ளிட்ட 200 இற்கும் மேற்பட்ட இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வரும் மக்களையும் மீள்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ε)


**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா

4 1/2 ரக்ரர் - 19000 /- 0777 590 792 (C-6377)



**DIPLOMA IN ENGLISH**

(LISTENING, SPEAKING, WRITING, READING)

IELTS Test Registration & Preparation Classess

யாழ் மாவட்டத்தில் ஆங்கிலமொழி கற்பிக்கும் முதன்மை நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன......

01.02.2014 காலை 9.30 மணி

(சனி/ஞாயிறு தினங்களில் காலை 9.30-12.00 வரை)

பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன........

U.K க்கான விசாவில் செல்பவர்களுக்கான A1,B1

E-CITY FEEL BRILLIANT FUTURE

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

Srilanka's NO.#1 English, Other Languages and Computer Training Centre

நாங்கள் உங்களை நம்பிக்கையாக ஆங்கிலம் பேச வைக்கிறோம்.

இல.372(1ஆம் மாடி) ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)

0212217106 :: 0774924166 :: 0773400418 :: 0770610271



**பொதுக்கூட்ட அறிவித்தல்**

வருடாந்த பொதுக் கூட்டம் வரும் 02.02.2014-ம் நாள் ஞாயிறு காலை 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் தலைவர் திரு.த.ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

த.ஜெகதீஸ்வரன் தலைவர் | க.ஜமுனாதரன் செயலாளர்

(5420)

தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்-கிளிநொச்சி மாவட்டம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.